
ஆசிரியர்: பெருஞ்சித்திரன்.

# தென்மொழி

## தமிழிளைஞர் வீறுகொள்க!

இற்றைநாள் தமிழிளைஞர் எழில்புனைந்து
குறுந்துணியை இறுக்க மாட்டிக்
கற்றைமுடி பின்தொங்கப் பாவையர்போல்
கடைசுற்றக் காணும் போது
மற்றைநலம் நினைக்கின்ற நினைவெழுமோ?
மறவுணர்வு மதர்ந்து தோன்ற
அற்றைநாள் நலன்மீட்கும் ஆர்வமெல்லாம்
அலைந்தெழுமோ? அழிந்தி டாதோ?

பழியாகும் பாழ்வழியை நம்மிளைஞர்
உடன்விடுத்துப் பதைப தைத்து,
மொழியாலும் இனத்தாலும் நாட்டாலும்
பொருளாலும் பண்பாட் டாலும்
விழியாமற் கிடக்கின்ற தமிழினத்தை
விடுவிக்க வீறு கொண்டால்,
பொழியாதோ பொதுமைமழை; பூக்காதோ
புதுமைநலம்; பூட்கை யோர்க்கே!



சுவடி: 11. ஓலை: ~~10,11~~ 12 விலை: ஓர் உருபா.

# நமக்கு வந்த மடல்கள்.

**0: 402:** பல்வேறு இடையூறுகளுக்கிடையிலும் தங்கள் தமிழ்ப் பணி அயராது தொடர்வது கண்டு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். இக்கால் தமிழ உணர்வு பல்துறையினும் பரவியுள்ளது மறுக்கவொண்ணா உண்மையாகும். ஆனால் அத்துணைத் திறன்களும் மிகவும் சிதறுண்டு கிடக்கின்றன. அவை அனைத்தையும் ஒரு முகப் படுத்தித் தமிழக விடுதலை நோக்கி வழி நடத்திச் செல்லத் தக்க திறன் வாய்ந்த ஓர் இயக்கம் இல்லாது இருப்பது பெருங் குறையாகப்படுகின்றது. அக்குறை நீக்கத் தாங்கள் இன்னும் அரும்பாடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். நாட்பட்டுக் கிடைப்பினும், இந்திய விடுதலை போல் இரந்து பெறுவதாக இருக்கலாகாது. மக்களின் மன எழுச்சியின் அடிப்படையின்மீது, பல்வேறு ஈகங்களால் அமைந்ததாக இருக்க வேண்டும். அதற்காக இப்போது இருக்கும் அனைத்துத் திறன்களையும் ஒருமுகப்படுத்தினால், அதைப்பெருக்குவது பிறகு எளிதாகும். எனினும் சொல்வது யார்க்கும் எளிய; அரிது அவ்வண்ணம் செய்தல். இருப்பினும் அரிய செய்தலே ஆண்மையெனச் செயலாற்றுவோம்.

—பொ. இளங்கோ. புதுக்கோட்டை.

**0: 403:** மதிப்பிற்குரிய பாவல! தாங்கள் ஒல்லும் வகையானெல்லாம் பாவாணரின் செ. சொ. பி. அகரமுதலித் திட்டத்திற்கு முயற்சி மேல் முயற்சி செய்து வந்தீர்கள். இன்று அதன் உருவாக்கத்திற்காக அரசே தன் பொறுப்பில் கட்டளை பிறப்பித்துப் பாவாணரை பொறுப்பேற்க அமைத்துள்ளது. இவ் வெற்றிக்கு முழுக்க, முழுக்க தாங்கள் தான் கரணியம் என்றால் அது மிகையாகாது. இதற்காகத் தங்கட்கு இத் தமிழகமும், தமிழ்நாட்டு மக்களும் பெருங்கடன் பட்டுள்ளனர்.

—இறைமகிழ்நன், தஞ்சை-1.

**0: 404:** நல்லுரை ஆசானே! புல்லிய வணக்கம். நான் கடந்த மூன்றாண்டாகத் தென்மொழி கற்றுவரும், ஒரு தென்மொழி மாணாக்கன். தென்மொழி சுவடி : 11 ஓலை : 8, 9 கண்டேன். உளங்கவன்றேன். "சாதிப் புழுக்கள் நெளிந்திடுஞ் சாணித் திரளைகள் நாம்" எனும் அட்டைப்பாடல் நனி அருமை. நிலா மண்டிலஞ் சென்று திரும்புமிக்காலத்தே, இது போன்ற பாடல்களை எழுதியெழுதிக் குவித்தாலும் நம்மவர் சாதி விடார்; அயல்நாட்டு அறிவியல் ஆக்கங்களையே அன்றாடம் பேசி மகிழும் அறிஞர்(!) இல்லங்களிலே, சாதி, ஓடி விளையாடுகிறது.

இன்றும், தொடக்கப்பள்ளி மாணாக்கர் தம் பிஞ்சுள்ளத்தே சாதியெனும் நச்சுவிதை விதைக்கப்படுதல் கண்கூடு. விதைப்போர், ஆசிரிய நன்...... மக்கள்; அறிவூட்டுங் கருவூலமாம் ஆசிரியராகிலும் சாதி விடுத்து மொழி, இன நலங்காக்க விழைகின்றனரா எனில், இம்மியளவுமில்லையே. யாது செய்வது? ஓய்வு நேரங்களில், ஆசிரிய நன்மக்கள், அறிவூட்டுங் கருவூலங்கள், பேசும் பேச்சுகளையும், எழுதும் எழுத்துகளையும் நோக்கினால், எதிர் வருங்காலக் குமுகாயம்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம் பார்க்க)

இம்மாதச் சிறப்பு மடல்:

# உங்கள் மேல் ஒரு குற்றச் சாட்டு!

*0: 408: பீடு சால் பாவலரேறே! வணக்கம்.*

*தங்களின் இக்காலப் போக்கு முறைகளை எதிர்த்தும் சாடியும் நான் எழுதும் இம்மடலை, கீழே கையெழுத்திடாமல் நான் விடுப்பதனாலேயே என்னை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளமாட்டீர்கள் என்று நான் எண்ணிவிடப் போவதில்லை. தங்களின் உணர்வாற்றலின் மேல், எனக்கும் என்னை நிகர்க்கும் மற்றவர்கட்கும் வலிந்த நம்பிக்கை உண்டு. இருப்பினும் இப்படி விடுப்பதன் காரணியம் என்னை நிகர்க்கும் மற்றவர்களால் நான் அறியப்படக் கூடாதென்பதே.*

*கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாய் என்னுள் முடங்கிக் கிடந்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்றேன். இதனாலேயே நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ளப் போவதில்லை; நான் சொல்வனவற்றைச் சரிதாம் என எண்ண முனையப் போவதுமில்லை. இருப்பினும் சொல்லுவதன் நோக்கம், எனக்கு நான் குற்றவாளியாய் இருத்தல் கூடாதென்ற உணர்வொன்றே.*

தென்மொழியின் தொடக்கம், தமிழக வரலாற்றின் பெருந் திருப்பம்! தமிழனின் எண்ணப் பெருவெளியில் ஓர் எரிமலை வெடிப்பு! தமிழனின் நெஞ்சாங் குலையும் தமிழகத்தின் முதுகந் தண்டும் தென்மொழியே. தென்மொழி என்ற தாளிகை மட்டும் தொடங்கப் பெறாது போயிருக்குமாயின் தமிழினத்தினதும் நிலத்தினதுமாகிய வரலாறுகள் கரையானுக்கிடப் பெற்றவையாகவே போயிருக்கும். இதன் தொடக்கமும் வளர்ச்சியும் எழுச்சி மிக்கவை–செம்மாப்புடையவை என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது. உண்மையை உண்மையே என்றும், தவற்றினைத் தவறே என்றும் அடித்தும் உரத்தும் சொல்லும் நெஞ்சுரம் தென்மொழியைத் தவிர்ந்த இன்னொரிதழுக்கு இருந்ததில்லை.

இப்படி வளையாத மனமும் கூன்விழாச் சொற்களையும் கருத்துகளையும் கொண்டிருந்த தென்மொழி இப்பொழுது எப்படி இருக்கிறது? எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பனவற்றை நோக்கும் பொழுதுதான், எங்கள் மனமே எங்களைக் கொல்லுகிறது; எங்கள் கருத்துக்களே எங்களை அடிக்கின்றன; எங்கள் தலைகள் தாமாகவே குனிந்து போகின்றன.

*இக்கால் தம்மைத் தாமே தற்கொலை செய்து கொண்டு பிணமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் திரவிட இயக்கங்கள், இம்மண்ணில் முளைத்துத் தழைத்துக் கிளைத்து வளரத் தொடங்கியவுடன், இங்குப் பற்றிய அறிவுத் தீயும் சுழன்று கிளம்பிய எழுச்சிப் புயலும் அளத்தற்கரியவை. அவ்வியக்கங்கள் மட்டும் தோன்றாது போயிருக்குமாயின், தமிழன் என்றோர் இனம் இருப்பதையே உலகம் அறிந்து கொண்டிருக்காது. தமிழனும் தன்னைத் தமிழன் என்று அறிந்து கொண்டிருக்கவே மாட்டான். இவையனைத்தும் உண்மைதாம். ஆனால் என்ன பயன்? பூக்கத் தொடங்கு முன்பே-மரம் காய்க்கத் தொடங்கு முன்பே தன் வேர்களைத் தானே வெட்டிக்கொண்டது. தன் உடலில் தானே நஞ்சேற்றிக் கொண்டது. தன் கழுத்தைத் தானே நெரித்துக் கொண்டது.*

இக்கால் இருக்கும் தி.மு.க., தி.க. போலும் இழிஞர்கள் நிறைந்த இயக்கங்களை உலகின் எப்பகுதியிலும் தேடிக் காண முடியாது. ஒருகால் வேறு கோள்களில் மாந்தர்கள் வாழ்வது கண்டு பிடிக்கப் பட்டு, அவர்களுள்ளும் இழிஞர்கள் இருப்பது தெரிய வருமானல், அப்பொழுதும், அவர்களும் இவர்களுக்கு இணையாக மாட்டார்கள். இவர்களுக்கு இணை இவர்களே.

இந்த இழிஞர்களுக்குத் துணைபோகத் தென்மொழி என்று தொடங்கியதோ,அன்றே தன் செம்மாப்பையும் உயிர்ப்பையும் அஃது இழந்ததாகி விட்டது. தன் ஆற்றல்மிக்க மறவர் படையின் ஒரு பெரும் பகுதியையும் இழந்து விட்டது. அதன் கூன் வீழாச் சொற்களும், கனல் உமிழும் கருத்துகளும் தந்நிலை திரிந்தன. ஒளிர்வுசால் எம் தாய் நிலவரலாற்றின் ஒரு பகுதியில் கறை படியத் தொடங்கி விட்டது.

தி.மு.க. வும், அதன் தலைவர் அண்ணாத்துரையாரும் தமிழகத் திற்குச் செய்த கேடுகள் பற்பல. அவற்றுள் எதைச் சொல்வது? எதை விடுவது. அண்ணா என்ற அந்தப் 'புருட்டசு' தமிழினத்தையும் நிலத்தையும் அடகு வைத்து விட்டுப் போய் விட்டான்! தினவெடுத்த தமிழகத்துப் புதுத் தலைமுறையின் குருதிகளை உறிஞ்சி உமிழ்ந்து விட்டான். இளைஞர்தம் உணர்ச்சிக் கூர்மையை-அறிவு முனைகளை மழுங்கச் செய்து விட்டான்" எம் தாயக விடுதலைக்குச் சாவு மணி அடித்தவன் அவனே! அவனே!! அவனே!!!


தன் விளம்பர வேட்கைக் கருணாநிதியைப் பற்றியோ, அவரின் "ரத கஜ துரக பதாதிகளை"ப் பற்றியோ ஒன்றும் சொல்ல வேண்டுவதில்லை.

உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இது மிகக் கொடிய நிலை. கருணாநிதிக்குப் புகழ்பாடும் தென்மொழிப் பக்கங் களில் முடை நாற்றம் வீசுகிறது. எதிரிகளின்முன் எங்களைத் தலை குனிய வைக்காதீர்கள். நீண்ட நெடுங்காலத் தமிழகத்து வரலாற்றின் ஒரு காலக் கட்டத்தில் எதிர்பாராமல் கிடைத்த பெருங்கருவூலமாகிய ஓர் ஒப்பரும் பேரறிஞனையே ஒரு விளம் பரப் பலகையாய்ப் பயன்படுத்தும் கொலைஞர்களுக்கு விளம்பரந் தேடுவதிலேயே உங்களின் வாழ்நாளை வீணாக்காதீர்கள். உங்கள் விடுதலை வேட்கைகள் கருணாநிதியின் மாநிலத் தன் (அடிமை) ஆட்சிக் கொள்கைக்கே எருவாகிக் கொண்டிருக்கின்றன.

மறந்துபோன விடுதலை இயக்கத்தை நினைவு கூருங்கள். வெறும் கைமாறுதல்களே விடுதலை ஆகி விடாது. நம் நில மீட்சியும், பொரு ளியலமைப்பு மாற்றமும், பண்பாட்டுப் புரட்சியை முழுமையாய்த் தோற்றுவித்து வெற்றி காண்பதும், தனிச் சொத்துரிமை-மதங்கள் ஆகியவற்றின் ஒழிப்பும் ஆகிய இவற்றை ஒருங்கே செயற்படுத்த வேண்டிய செம்மையான பொதுமை அரசைத் தோற்றுவிக்க எங்கட் குத் தலைமை ஏலுங்கள். "அரைச் செல்வர்"கட்குப் போற்றி பாடித் தென்மொழியைக் கறைப் படுத்தாதீர்கள். தமிழ்நாடு தமிழருக்கே!

நாள் 17—9—74

தமிழக விடுதலை இயக்கம்-மற்றும்
தமிழ்நிலப் பொதுவுடைமை-பண்பாட்டு இயக்கம்
ஆகியவற்றின் கீழ்நிலை உறுப்பினன் ஒருவன், கோவை-11.




# தென்மொழி
இலக்கிய இதழ்


"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!


சுவடி: 11, ஓலை: 12.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

மடங்கல். தி- பி. ௨00௫ - (ஆக-செப்-1974.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.


# மூளை கெட்ட முண்டங்கள்!



மெய்யுணர்வு அடிப்படையில், இவ்வுலகங்கள் அனைத்தையும் பருப்பொருள் நுண்பொருள் அளவாக, இணைத்துப் பிணைத்து ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும்—என்றும் அழிவுறாத மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்று எண்பொருளளவாக உணர்வதும், அவ்வுணர்வுக்கேற்ப நடந்து கொள்வது என்பதும் வேறு. கடவுள் என்பவர் இவ்வெல்லையற்ற வான்வெளியில் எங்கேயோ ஓரிடத்தில் நாற்காலி ஒன்றைப் போட்டு உட்கார்ந்து கொண்டு, அல்லது கட்டில் ஒன்றைப் போட்டுப் படுத்துக் கொண்டு, பெண்டாட்டி, பிள்ளைகள், மருமகன், மருமகள், பெயரப் பிள்ளைகள் ஆகியவர்களோடு குடும்பம் நடத்திக் கொண்டும், பகை

வர்கள், நண்பர்கள் ஊர்திகள் ஆகிய பரிவாரங்களுடன் நம்மை யெல்லாம் அங்கிருந்து பார்த்துக் கணக்குப் பண்ணிக் கதை நடத்திக் கொண்டும் உள்ளார் என்று நம்புவதும்; அந்நம்பிக்கைக் கேற்ப இங்கிருப்பவர்கள் ஏதோ சில வடிவங்களைக் கற்பனையாகச் செய்து வைத்துக் கொண்டு, அவற்றின் வழியாக அக்கடவுளர் கடவுளச்சியர்களை வணங்குவதாகக் கருதிக்கொண்டு கல்லிலும் கட்டையிலும் களிமண்ணிலும் போய் முட்டிக் கொள்வது என்பதும் வேறு!

இவ்விரண்டு நிலைகளிலும் எது மிகச்சரி எது மிகத்தவறு என்பன பற்றியெல்லாம் நாம் இங்கு ஆராய விரும்பவில்லை. இரண்டும் இரு வேறு மாந்த உணர்வின் அடிப்படையில் அறிவுத் தொடர்பு வேறுபாட்டான் எழுந்த இருவகை மன வெழுச்சிகளே! மக்களில் ஒரு வகையினர்க்கு தூய ஆவின்பால் அருந்தினால்தான் நிறைவாயிருக்கும்; இன்னொரு வகையினர்க்கு அப்பாலுடன் குளம்பி நீரையோ கொழுந்து நீரையோ கலந்து குடித்தால்தான் நிறைவாக இருக்கும். அஃது அவரவர் மனநிலை அறிவு நிலைகளைப் பொருத்தது. ஆனால் பொது மக்களில் ஒருவராக இருந்து நடந்து கொள்வதற்கும், பொதுமக்களுக்கே ஒருவராக – அவர்களுக்குற்ற அரசியல் தலைமையையோ அதிகாரத் தலைமையையோ ஏற்றுக் கொண்ட ஒருவராக இருந்து நடந்து கொள்வதற்கும் இவ்வுலகில் சிற்சில தனி நடைமுறைகள் உண்டு. அதுவும் குடியரசு அமைப்பு வாய்ந்த இந்தியா போலும் ஒரு நாட்டின் அரசியலரங்கில், உயர்ந்த அதிகாரங்கள் வாய்ந்த ஒரு பதவியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள்-மக்களிடையே வந்து ஊடாடுங்கால் நடந்து கொள்ள வேண்டிய நடை முறைகள் மிகவும் இன்றியமையாதவை. அத்தகைய நடைமுறைகள் அம்மக்களுள் பலரை அவமதிப்பனவாகவோ, அடிமைப் படுத்துவனவாகவோ இருத்தல் கூடாது. அண்மையில் இந்தியத் தலைமையமைச்சராக வீற்றிருக்கும் திருவாட்டி இந்திரா காந்தி அம்மையார் தமிழ்நாட்டிற்கு வந்து போனபொழுது, தாம் பழுதுபட்டுப் போகாத ஓர் உண்மையான ஆரியப் பார்ப்பனத்தியே என்பதைக் காட்டிக் கொள்ளும் வகையில், காஞ்சி ஆச்சாரியாரிடத்தில், கைகட்டி மெய்யொடுங்கி வாய் புதைத்துக் கண்மூடி, ஒன்றரை மணி நேரம் ஆழ்ந்த ஊழ்கத்தில் (தியானத்தில்) இருந்ததாக ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ள பார்ப்பன ஏடுகள் பலவும் எழுதித் தங்கள் உச்சிக் குடுமிகளைத் தட்டி விட்டுக் கொண்டும் மேனிப் பூணூலை உருவிக் காட்டிக் கொண்டும் பொங்கிப் பூரித்துப் போயினவே, அதை நினைக்கும் பொழுதுதான், பொது மக்களாக இருந்து புலன்கெட்டுப் பொறிகெட்டு வாழ்பவர்க்கும், அம் மக்களை ஆளும் அதிகாரம் படைத்த ஆட்சியாளராக இருப்ப

வர்க்கும் இத்தகைய நடைமுறை வேறுபாடுகள் இருக்க வேண்டிய தில்லையோ என்று கருத வேண்டியுள்ளது.

பொதுவாகவே, இந் நாட்டில் உள்ள சமயச் சழக்குகள் மிகப்பல. சடை வளர்த்தவனெல்லாம் காவி உடுத்தவனெல்லாம் கடவுள்கள்—இங்கு! கொட்டையணிந்தவனெல்லாம் பட்டை தீட்டியவனெல்லாம்—அல்லது போட்டவனெல்லாம் துறவிகள்—மாமுனிவர்கள்—இந்நாட்டில்! காவி உடையில் எத்தனை வகையான கயமைத்தனங்களையும் இங்கே செய்யலாம். யார் அதற்குத் துணை நிற்காமல் போனாலும் பச்சைப் பார்ப்பனர்கள், பசையுள்ள தமிழ்ச் செல்வர்கள் எல்லாம் தம்தம் பெண்டு பிள்ளைகளுடன் இரவு பகலாக வந்து உறவு கொண்டாடிப் பூரிப்பர். அவர்கள் கைகளில் உள்ள 'இந்து', 'மித்திரன்', 'தினமணி' 'கல்கி', 'ஆனந்தவிகடன்' போன்று மிகுந்த வல்லமை வாய்ந்தனவும் உலகளாவி நிற்பனவுமான ஆரியப் பார்ப்பன இதழ்களோ பக்கம் பக்கமாக விளம்பரம் கொடுத்து உலகத்தையே மருள வைக்கும் ஆற்றல் சான்றவை! இந்நிலையில் காஞ்சிப் பார்ப்பான் மட்டுமில்லை, காசிப் பார்ப்பானும் இங்கே மடம் எடுக்கலாம்; மடி பறிக்கலாம்; கடவுள் ஆகலாம்; கவலையில்லாமல் கரி, பரி, காவடி, பல்லக்குகளுடனும் இன்னும் கவர்ச்சியாக இருக்க வேண்டுமானால்—கால் நடையுடனும்—கன்னியாகுமரி முதல் காசி வரையும் சென்று, காவிரி என்றும் கங்கை என்றும் நீராடிக் காட்டிப் புகைப்படம் பிடித்து மேற்கூறிய அத்தனைப் பூணூல் இதழ்களிலும் போட்டு விளம்பரம் ஆகலாம், இன்னுஞ் சொன்னால் அவர்கள் அரசியல் ஆதரவும் பெற்று அமெரிக்கா, இங்கிலாந்து மட்டுமன்று; உருசியா, சீனா கூடப் போகலாம்; போய் 'அரே ராமா' 'அரே கிசுணா' ஒலம் போட்டு ஊர்வலம் வரலாம்; நியுயார்க்கிலும் வாசிங்டன்னிலும் நிலங்களும் வாங்கிப் பிள்ளையார் கோவில்களும் கிருட்டிணன் கோவில்களும் கூடக் கட்டலாம்; பணம் போதவில்லையானால் இங்குக் கண்ணதாசத் தமிழர்களும், மகாலிங்க அடியார்களும் இல்லையா என்ன? அவர்களுக்கு வேண்டியவற்றுக்குத் தாழைத் திறந்து விட்டால் அவர்கள் தம் வாயைத் திறக்க மாட்டார்களா? அவர்களும் இல்லாவிட்டால், இருக்கவே இருக்கிறார்கள், நம் பக்தவச்சல, சுப்பிரமணிய, ஆஞ்சநேய, சுக்ரீவர்கள்! அவர்கள்தாம் எப்பொழுதும் 'அவாளின்' வீர விளையாட்டுகளைத் தமுக்கடித்தும் தண்டோராப் போட்டும் பழைய 'பண்டோரா'ப் பெட்டியைப்போல ஒருவகை வியப்பை உருவாக்குபவர்களாயிற்றே! எனவே, சமய ஆரவாரங்களுக்கா இந் நாட்டில் பஞ்சம்? இக்கால் உள்ள அரசியல் ஆரவாரங்கள் எல்லாம் மக்களுக்கு என்னவென்றே தெரியாத ஒரு 'பச்சைப் பிள்ளைக்' காலத்தில், மதங்களும் அவற்றைக்

கட்டியாண்ட மாமுனிவர்களும் செய்த 'கடவுட்' கூத்தாட்டங்களும், 'ஆகம' 'வேத' 'புராண' ஆரவாரங்களும் கொஞ்சமா, குறைவா? அத்தகைய பொய் புழுக்கை நிரம்பிய காரமான கழிவுகளை எருவாகக் கொண்டுதானே, இந்நாட்டில் கடவுளின்மைக் கொள்கையே தளதளவென்று தழைபரப்பி வளர்ந்து வரலாயிற்று. மற்றபடி, மெய்யறிவுக் கோட்பாட்டின் அடிப்படையில் மாந்த மனத்தின் வளர்ச்சிக்கே கடவுளுணர்ச்சி என்னும் நுண்பொருளுணர்ச்சி மலர் போன்றதன்றோ! அத்தகைய உயரிய உணர்ச்சி மலத்தில் விழ்ந்து மீண்டும் பருப்பொருள் தன்மையெய்திய தன்மையினாலன்றோ, மக்களிடையே இத்துணைப் புறநிலை வேறுபாடுகளும், பொதுநிலைப் போராட்டப் பூசல்களும் எழுந்து கொடிகட்டிப் பறக்கத் தொடங்கியுள்ளன, இறையிலிக் கொள்கையின் தோற்றமே பார்ப்பான் தான்தான் பூதேவன்–கடவுளுக்குச் சமமானவன் என்று அலப்பிக் கொண்டதன் அடிப்படையில் தொடங்குகின்றது. ஓர் ஊசைப் பார்ப்பனன் வடிவில்தான் இறைவன் என்னும் மெய்ப்பொருள் இயங்குமென்றால், அத்தகைய இறைவனே தேவையில்லை-என்னும் எதிர்நிலைக் கருத்தினடிப்படையில் எழுந்ததே இறையிலிக் கொள்கை! ஆரிய 'வேதங்'கள் இந்நாட்டில் கால் வைக்கத் தொடங்கிய பொழுதுதான் பழந்தமிழரின் கடவுள் கொள்கையில் துருப் பிடிக்கத் தொடங்கியது. மற்றபடி. இறைவன் இல்லை எனும் கொள்கை தமிழரிடம் என்றும் இருந்ததில்லை. உலக மாந்தவினத்திலேயே முதன்முதல் மெய்யுணர்வு கைவரப் பெற்ற இனம் தமிழினமே! அவன் மொழியே இதற்குச் சான்று. அதனால்தான் உலக மொழிகளுக்குள் தமிழ்மொழி இயற்கை மொழியாகவும், உண்மைப் பொருள் சான்ற மொழியாகவும் இருக்கின்றது. எனவே, இறையிலிக் கொள்கை தமிழனின் கொள்கையன்று; அதேபோல் இறைக் கொள்கை ஆரியனுடையது மன்று. ஆரியனுக்குக் கடவுள் கொள்கை பருப்பொருள் அளவினதாகவே என்றும் இருந்தது. நுண்பொருள் அளவாக இறைவனை அவன் என்றும் கண்டதில்லை, கண்டதற்கான சான்றுகள் அவன் 'வேதங்'களிலுமில்லை; 'புராணங்'களிலும் இல்லை. அவனுக்குக் கடவுளுணர்வே என்றும் இருந்ததில்லை. தெய்வ உணர்வுதான் இருந்தது. தெய்வம் என்னும் பருப்பொருள் உருவ வுணர்ச்சிவேறு; கடவுள்-இறைவன் என்னும் நுண்பொருள் அருவ வுணர்ச்சி வேறு. ஆரியனின் தெய்வங்கள் பொருள் வடிவாய பூதங்களேயாகும், மாந்த வடிவங்களில்தாம் அவற்றை அவன் விளங்கிக் கொண்டான். நுண் பொருளறிவு அவனுக்கு என்றும் இருந்ததில்லை. அவ்வாறில்லாமையால்–தான் தன்னை அவன் தேவன் என்றும் எல்லாருக்கும் மேலானவன்

என்றும் கூறிக் கொண்டான். மெய்ப் பொருளுணர்வுள்ள இறையுண்மையாளன் ஒருவன் மாந்தப் பிறப்பில் மேல் கீழென்றும், நிலையில் இழிவு தாழ்வென்றும் உணர மாட்டான். அவனுக்குப் பொன்னும் மண்ணும் ஒன்றே! இழிந்தோனும் உயர்ந்தோனும் ஒருவனே! இவ்வுயரிய கடவுட் கோட்பாட்டை ஆரியப் பார்ப்பனர் அறிந்திருக்கவில்லை; ஆகையால்தான், மக்களைத் தாழ்வுயர்வு கற்பித்துக் கூறுபடுத்தினர். தமிழர்களிடம் இத்தன்மை என்றும் இருந்ததில்லை. இவற்றை விரிக்கில் பெருகும். மாந்த வரலாற்றையும், நில வரலாற்றையும், மெய்ப் பொருள் நூலையும் அறிவியலுணர்ச்சியுடனும் நடுநிலையுணர்வுடனும் ஆழ்ந்து பார்க்கும் எவரும் இந்த உண்மைகளை மறுத்தல் இயலாது.

பண்டைக் கழக இலக்கியங்களிலும், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூற்களிலும் பருப் பொருளளவாகக் கூறப் பெற்ற தெய்வ வழிபாடுகள் அனைத்தும் ஆரியத் தொடர்பால் ஏற்றப் பெற்ற வெறித்தனங்களே ஆகும். அவைதாம் இன்று காறும், சங்கராச்சாரிகளிடமும், மடத் தம்பிரான்களிடமும் உள்ள ஆள் வணக்கக் கோட்பாடுகளாம். இன அடிமைத்தனத்தின் இறுதி எச்சங்கள் இவை. என்றும் மாந்தன் இறைப் பொருளுக்குச் சமமாக இருக்கவே முடியாது. இவ்வாறுனல் இறைப்பொருள் என்று ஒன்று இருக்கவே முடியாது. இந்நிலைகளை விளக்க வேண்டுமாயின் எல்லாச் சமயங்களின் அக்கு வேர் ஆணி வேர்களையும் ஆட்டி அசைத்துக் காட்டியாகல் வேண்டும். அத்தகைய ஆராய்ச்சிகளைப் பின்னர் செய்து காட்டுவோம். இக்கால் மாந்த உருவத்தில் உள்ள ஒரு சில மடிகட்டிப் பார்ப்பனர்களைக் கடவுள்களாக எண்ணி, அவர்களுக்குப் 'பெரிய' 'பெரிய' 'இது'கள் இருப்பனவாகக் கதைகள் கட்டி, மக்களினத்தையே அவமதிப்பதும், ஏமாற்றி வருவதும், அவ் வேமாற்று மதிமயக்கங்களுக்குட்பட்டு, இந்தியத் தலைமையமைச்சுப் பதவியிலமர்ந்திருக்கும் இந்திரா போலும் மூளை கெட்ட முண்டங்கள் ஓர் ஊசைப்பார்ப்பான் முன் போய் முட்டி போட்டுக் கொண்டு, மணிக் கணக்காகத், தம் வேலை வெட்டிகளையெல்லாம் விட்டுவிட்டு அமர்ந்திருப்பதும் நினைத்துப் பார்க்க முடியாத கொடுமை!......அரசியல் ஏமாற்று! இத்தகைய அரசியல் முடிச்சுமாறித் தனங்கள் இருக்கும் வரை இந்தியா ஒரு போதும் முன்னேறப் போவதில்லை. கயமைத் தனங்களுக்குக் கொள்கலனுகவும், வறுமைக்கு எருக்குழியாகவுமே இந்நாடு இருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.

வெறும் இந்திராகாந்திக்குப் பார்ப்பனர்களிடம் கொஞ்சமும் மதிப்பில்லை என்பதை இந்திரா அம்மையார் தம் பதவியிறக்கத்தின் பின்

ஒருவேளை உணர்ந்து கொள்ளலாம். தலைமையமைச்சர் இந்திரா காஞ்சிக்கு வந்தார்; காமகோடி முன் நின்றார்; கண்களை மூடி ஒன்றரை மணி நேரம் வணங்கினார் என்பதில்தான் பார்ப்பனர்களும், காமகோடி அடிவருடிகளும் உச்சி குளிர்ந்து போயிருக்கின்றனர். இந்து, தினமணி, மித்திரன் அனைத்தும் அன்று கொட்டை கொட்டை யாகச் செய்தி தந்ததில் வியப்பில்லை. ஆனால் இந்த 'அலை ஓசை'களும் 'நவமணி' போலும் தமிழின இதழ்களும் அச் செய்தியை வெளியிட்டுப் பூரித்துப் போயினவே, அதுதான் விளங்கவில்லை. ஒரு வேளை அம்மை யாருக்கு இனிக்கின்ற செய்தியாக அஃதிருக்கும் என்று அவை நம்பினவோ, என்னவோ?

'தினமணி'யின் 'விசேஷ நிருபர்' இதைப்பற்றி ஒரு புராணமே எழுதியிருக்கின்றார். தினமணி நடையில் 'விசேஷ' என்றால் 'பச்சைப் பார்ப்பனத் தன்மைவாய்ந்த' என்று பொருள். அத்தன்மை வாய்ந்த 'பூணூல்' எழுதுகின்றது; அச் செய்தியைத் தொடங்கிய முறையே செய்தியாக இல்லை; 'புராண'மாக இருந்தது: "தேசத்திற்கு நல்ல காலம் பிறக்கப் போகிறது என்பதற்கு இதைவிட நல்ல அறிகுறி வேறு என்ன வேண்டும் என்பதே, இன்று காலை பிரதம மந்திரி இந்திராகாந்தி தேனம்பாக்கத்தில் ஸ்ரீகாஞ்சி பெரியவாளை தரிசனம் செய்ய வந்தபோது, பொதுவாகத் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயமாக இருந்தது."—எப்படி? இந்திராகாந்தி 'பெரி யவாளை'த் 'தரிசனம்' பண்ணினவுடனே இத் 'தேசத்திற்கு' நல்ல காலம் பிறக்கப் போகின்றதாம்! இதைவிடப் பெரிய புளுகு, ஏமாற்று, கயமைத்தனம், மக்களைப் பட்டப் பகலில் ஏய்க்கின்ற தன்மை வேறென்று இருக்க முடியுமா? முடியவே முடியாது. இனி, இதிலிருந் தாவது பார்ப்பனத் தொழும்பர்கள் இந்திரா ஆட்சிக்கு எதிராக எக் கருத்தையும் சொல்ல மாட்டார்கள் என்று எதிர்பார்க்கலாமா? இந்திரா காந்திதான் தன் கரிசு (பாவங்)களை யெல்லாம் காஞ்சி காம கோடியிடம் கழுவி ஊற்றித் துடைத்துக் கொண்டு போய் விட்டாரே, இனிமேல் எப்படித் தவறு வரும்? பஞ்சம் வரும்? 'விலைவாசி'கள் ஏறும்? அப்படி நடந்தாலும் அஃது எப்படி இந்திரா ஆட்சியின் தவறாகும். அஃது அந்தக் காஞ்சிக் காமகோடிப் பீடாதிபதியாகிய 'பெரிய வாளின்' தவறாகவன்றோ இருக்கும்? இப்படி ஒப்புக் கொண்டு தினமணிப் பூணூல்கள் இனி வாயை மூடிக்கொண்டு கிடக்குமா? இல்லை, அதற்கும் ஒரு புராணம் எழுதி மக்களைத் திசை திருப்புமா?

அந்தத் தினமணியின் 'விசேஷப்' பூணூல் அடுத்த வரியை இன் னும் சற்று எடுப்பாகவே தொடர்கின்றது. அஃதாவது 'அந்தப்'

பூணூலின் 'அபிப்பிராயத்தை' அங்குப் பொதுவாகத் தெரிவிக்கப் பட்ட' 'அபிப்பிராயமாக' எண்ணிக் கொள்வதில் எவரேனும் ஐயப் பட்டால், அந்த ஐயத்தை அடுத்த வரி போக்கி விடுகின்றது. கருத்துக் கோர்வையை நன்கு கவனியுங்கள் :

"மடத்தின் பக்தர்கள் மட்டுமின்றி, அரசியலில், பிரபல மானவர்களும், மத்ய சர்க்காரில் முன்பு மந்திரி பதவி வகித்தவர் களும் கூட இதை அப்படியே ஏற்றுக் கொண்டனர்... ஸ்ரீ பெரிய வாளை தரிசிப்பதற்கு பிரதமர் துடித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை அவருடன் வந்த அதிகாரிகளே (அதிகாரிகள் என்ன கொம்பு முளைத்தவர்களா?) ஒப்புக் கொண்டனர்."

(தினமணி: 11—9—74)

—எப்படி? தினமணிப் பார்ப்பான் இந்தச் செவ்வாய் மண்டிலக் காலத்திலேயே எப்படிப்'புராணம்'எழுதுகின்றான் பாருங்கள்! இன்னும் அவன் எழுதிய செய்திகளையெல்லாம் ஒருசேரப் படிப்பார்க்கு ஒரு மயக்கமே தட்டும். அந்த 'விசேஷக்' குடுமி அப்படிச் செய்தி தருகிறது: "இந்த ஒன்றரை மணி நேரம் அவர்கள் என்ன பேசினார்கள் என்பதைப் பற்றி நிச்சயமாக யாரும் சொல்ல முடியாது" (ஏன் முடியாது, பூணூல் அவர்களே? திருப்பாற் கடலிலே பாம்புப் பள்ளி கொண்டிருக்கும் திருமாலும், கைலையின் உச்சியில் தவநிலையில் அமர்ந்திருக்கும் சிவனும் தம் தம் துணைவியார்களுடன் எந்தெந்த நேரத்தில் எந்தெந்த மொழிகளில் என்னென்ன பேசிக் கொண்டனர்– கொள்கின்றனர் என்பவற்றையெல்லாம் ஒன்றியிருந்து கண்டு காட்டி யுரைக்கும் சிண்டுக் கூட்டத்திற்கு இதெல்லாம் இயலாத செயல்களா? என்ன!)

மேலும் தினமணியின் 'விசேஷப்' பூணூல் 'புராணம்' எழுதுகிறது

"அவர்கள் இருவரும் சந்தித்தபோது மூன்றாவது மனிதர்கள் யாரும் அங்கே அனுமதிக்கப்படவில்லை." (அந்த 'மனிதர்'கள் யாராக இருக்கக்கூடும் என்பதைப் அந்தப்பூணூல் விளக்குகின்றது)... 'மரகதம் சந்திரசேகரன், ஓ. வி. அளகேசன், சி. ஆர். பட்டாபி ராமன் போன்றவர்கள் கூட அப்போது அவர்களுடன் இல்லை. பிரதமர் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்ததாகவும், பெரியவாள் பதிலளித்ததாகவும் பொதுவாக நம்பப்பட்டது." (நம்மையும் நம்ப வேண்டும் என்று பூணூல் அலப்புகிறது.) ஆனால் பெரியவாள் சிரித்த முகத்துடன் பிரதமர் கூறியதைக் கேட்டுக் கொண்டு, சைகை மூலம் ஆசி கூறினர் என்றும் கூறப்படுகின்றது, அது எப்படி யிருந்தாலும் உண்மையான ஆர்வத்துடன் தான் பிரதமர் அங்கு வந்தார் என்பதை யாரும் மறுக்க முடியாது."

—எப்படி? "என்று கூறப்படுகிறது" "நம்பப் படுகிறது" என்று, இன்னும் எத்தனைக் காலங்களுக்குத்தான் இந்தச் 'சிவராமன்'களும், 'பலராமன்'களும் நம்மை ஏமாற்றிக் கொண்டிருப்பார்களோ? நாமும் ஏமாறிக் கொண்டிருப்போமோ? தெரியவில்லை. ஆனால் நம்மவர் களுக்குச் சூடு சுரணை ஏற்படும் வரை அவர்கள் அப்படிச் செய்து கொண்டுதான் இருப்பார்கள் என்பதை மட்டும் உறுதியாக நம்பலாம்.

இறுதியாகப் பூணூல் 'புராணம்' எழுதி முடிக்கிறது, பாருங்கள்; அந்தக் கலை நம்மவாளுக்கெல்லாம் வரவே வராது. 'அவாளுக்' கென்றே கை வந்த கலை!

"இந்த யுகத்தின் தவசிரேஷ்டர் என்று ஒரு மனதாகப் போற்றப்படும் பெரியவாள் முன்பு அமர்ந்து கொண்டு தன் மனதிலுள்ள குறைகளை, அபிலாஷைகளை எதிரே உள்ள அந்த காந்த சக்திக்கு மானசீகமாக அனுப்பிக் கொண்டிருப்பதிலேயே அவருடைய கவனம் பூராவும் இருந்தது" என்று எழுதியிருக் கின்றது தினமணி!

இங்கு "அந்தக் காந்த சக்திக்கு மானசீகமாகச்" செய்தி யனுப்பிக் கொண்டிருந்தவர் வெறும் இந்திராகாந்தியானால் நாம் கவலைப்படப் போவதில்லை. இந்த நாட்டை முன்னின்று நடத்தும் கோடான கோடி மக்களின் தலைவி—இந்திராகாந்திதான் காஞ்சி காமகோடிகளின் காந்தவாற்றலோடு கலந்திருந்தார் என்று செய்தித் தாளில் படிக்கும் பொழுது நமக்கு என்னவோபோல்......குமட்டுவது போல்கூட ஓர் உணர்ச்சி ஏற்படுகின்றது. தூ! இத்தகைய ஓர் அடிமை யுணர்வுள்ள ஒரு தலைமையா இந் நாட்டை முன்னேற்ற முடியும்...?

அடுத்தபடி, இறுதியாக, தலைமையமைச்சர் இந்திராகாந்தி அந்தக் காந்த ஆற்றலிடம் வேண்டிக் கொண்ட செய்தியும் வெளியாகி யுள்ளது; வெட்கக்கேடு! அதையும் படியுங்கள்:

"தேசம் சுபிட்சமா யிருக்க வேண்டும். மக்கள் க்ஷேமமாக இருக்க வேண்டும். அதற்குத் தாங்கள் அனுக்ரஹம் செய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன், நாட்டின் முன்னேற்றத்தில் விருப்பம் இல்லாத சில சக்திகள் இயங்குகின்றன. அந்தச் சக்தி களைச் சமாளிக்கும் உறுதியை எனக்கு அனுக்ரஹிக்க வேண்டு மெனப் பிரார்த்திக்கிறேன் என்று பிரதமர் கேட்டுக் கொண் டார்."

எப்படி?—இந்நாட்டுத் தலையமைச்சரின் இழிவான அரசியல்...? இதற்கா குடியரசு என்று பெயர்? இதுதான் உண்மையான அரசியல்

திறமையாக இருக்குமானால் இங்குள்ள அனைவரும் ஏன் தில்லியை நோக்கித் தவம் கிடக்க வேண்டும்! எல்லாரும் காஞ்சிப் பெரியவாளின் கடைக்கண் பார்வைக் கன்றோ காத்திருக்க வேண்டும்! அது சரி; இந்திரா வேண்டியது இந்தப் பூணூலுக்கு எப்படித் தெரிந்தது...? இதனிடம் அந்த அம்மாள் சொன்னாளோ!

நல்ல நகைச் சுவை! ‘துக்ளக்’ மொட்டையனின் மூளைக்கெல்லாம் இந்த நகைச்சுவை பிடிக்காதோ? நகைச்சுவையிலும் ‘பிராமண’ நகைச்சுவை ‘சூத்திர’ நகைச்சுவை என்று ஒன்று உண்டு என்று அம் மொட்டைப் பூணூல் விளக்கங் கூறினாலும் கூறலாம்!

இவற்றையெல்லாம் பார்க்கையில் இந் நாட்டின் தாழ்ச்சி உயர்ச்சியெல்லாம் இங்குள்ள அறிஞர்கள் கையிலோ, அரசியல் தலைவர்களின் மூளையிலோ, தொழிலாளர், உழவர்களின் கைகளிலோ இன்னுஞ் சொன்னால் அமெரிக்கன் உருசியன் கையிலோ இல்லை; இங்குள்ள ‘பஞ்சகச்ச’ பார்ப்பனன் கையிலேயே இருக்கின்றது என்பதைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டி விட்டது, காஞ்சி காமகோடி—இந்திராகாந்தி இவர்களின் சந்திப்பு!

—நன்று! மிக நன்று! இந்தியாவின் மூட மத அரசியல் கோட்பாடுகள்! உம்... என்றைக்குத்தான் நம்மவர்கள் விழித்தெழுவார்களோ, பார்பபோம்!

## செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்.

செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகத்தில் சேர்வதற்கு விளக்கம் வேண்டியும், பங்குகள் கேட்டும் அன்பர் பலரிடமிருந்தும் மடல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இக் கூட்டுறவுக் கழகத்திற்கான அடிப்படை ஆக்க முயற்சிகளும், சட்ட நெறிமுறை வரைவுகளும், பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முறைப்படி மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. அதன்பின் விரிவான அறிக்கைகள் வெளியிடப் பெறும். அதற்குள் தங்கள் பங்குத் தொகையினை விடுக்க விரும்பும் அன்பர்கள், தாம் எடுத்துக்கொள்ள விரும்பும் பங்குகளுக்கான தொகையுடன் சேர்ப்புக் கட்டணம் ஓர் உருபாவும் சேர்த்து தம் முழு முகவரியுடனும் விளக்கத்துடனும் ‘தென்மொழி’ சென்னை-5 என்னும் முகவரிக்கே விடுத்து வைக்கவும். ஒரு பங்கு ஓர் உருபா. ஒருவர் எத்தனைப் பங்குகள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தேவையான பங்குகள் விரைந்து நிறைவாகி வருகின்றமையால் அன்பர்கள் முந்திக் கொள்வது நல்லது.

25—9—[74<br>
சென்னை-5.

பெருஞ்சித்திரன்.<br>
அமைப்பாளர்.

தொடர்:

# சிங்கை, மலையகச் செந்தமிழ்ச் செலவு.

—பெருஞ்சித்திரன்.

## முன்னுரைக்கு முன் உரை:

பாவலர் திரு. முல்லைவாணன், ஈராண்டுக்கொரு முறையோ மூவாண்டுக்கொரு முறையோ தமிழகம் வருவார். தமிழகம் வரும் பொழுதெல்லாம் என் சிங்கைச் செலவு எவ்வளவு இன்றியமையாதது என்பது பற்றிப் பேசுவார். நானும் பாவாணரும் சேர்ந்துதான் சிங்கை செல்லுதல் சிறப்பு என்று நான் கருதியிருந்தேன். ஆனால். பாவாணரை அழைத்து வருவதற்குமுன் நான் தனித்து ஒரு முறை சிங்கை வருதல், அங்கிருக்கின்ற சூழல்களை அறிந்து கொள்வதற்கும், பாவாணர் வருகைக்குத் தக்க மனப் பக்குவங்களை மக்களிடத்தில் உருவாக்குவதற்கும் பொருத்தமாயிருக்கும் என்று அன்பர்கள் கருதுவதாய் திரு. முல்லைவாணன் சொல்லி என் செலவை வலியுறுத்தினர்.

மூன்றாண்டுகளுக்கு முன்பே ஒரு முறை நான் சிங்கை செல்லுவதற்குரிய முயற்சிகள் வலிந்து செய்யப்பெற்றன. ஆனால் போதிய பொருள் வலிவின்மையால் அம் முயற்சிகள் தடைப்பட்டே வந்தன. இறுதியாகச் சென்ற ஆண்டின் முடிவில் திரு. முல்லைவாணனும் பாவலர் திரு. அன்பரசனும் தமிழகத்திற்கு வந்தனர். திரு. அன்பரசன் என்மேலும பாவாணர் மேலும் அளவிறந்த காதலைக் கொண்டிருப்பவர் என்று முன்னரே கேள்விப்பட்டிருந்தேன். பாவேந்தர் பாரதிதாசனைத் தெய்வமாக வழிபடுபவர். அவர் பாடல்களையும் தென்மொழியில் வெளிவந்த என் பாடல்களையும் ஏராளமாக மனப்பாடம் பண்ணியிருந்தார். அவர் மலேசியக் குடிமகனாக விருந்தாலும் அவர் பெற்றோர்கள் தமிழ் நாட்டினர். அவருக்கு இன்னும் சேலம் மாவட்டத்தில் சிறிது நிலபுலங்கள் இருக்கின்றன. அவற்றின் தொடர்பாக அவர் இம்முறை தமிழகம் வந்திருந்தார். அத்துடன் பாவாணரையும் என்னையும் பார்த்துப் போகும் நோக்கமும் அவர் வரவுக்கு மிக இன்றியமையாததாக விருந்தது.

திரு. அன்பரசன் தொழிலின் பொருட்டுச் சிங்கையில் இருந்து வருகிறார். சிங்கையிலிருப்பதால் திரு. முல்லைவாணனுடன் நெருங்கிப் பழகவும் அவருடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் நிறைய வாய்ப்புகள் இருந்தன. தென்மொழி என்றால் இருவருக்கும் உயிர். இவர்களைப்போல் தென்மொழியை உயிராகக் கொண்டு அதன் வளர்ச்சியில் கண்ணூன்றியிருப்பவர்கள் சிங்கையிலும் மலேசியாவிலும் நூற்றுக் கணக்கில் உள்ளனர். திருவாளர்கள் முல்லைவாண

னும், அன்பரசனும் சிங்கை மாதவி இலக்கிய மன்ற வுறுப்பினர்களாக விருந்ததுடன் தென்மொழி இரட்டையர்களாகவும் இருந்து பலவகையிலும் தென்மொழித் தொண்டாற்றி வந்துள்ளனர்.

அவ்வப்பொழுது தமிழகம் வந்து திரும்பும் திரு முல்லைவாணனிடம் தென்மொழியைப் பற்றியும் பாவாணரைப்பற்றியும் செய்திகளைக் கேட்டு அறிந்து கொள்வதில் மட்டுமே நிறைவடைந்திருந்த திரு. அன்பரசன் இம்முறை தமிழகம் வந்தபொழுது, தென்மொழிக் குடும்பத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார். குடும்பத்தோடு குடும்பமாகக் கலந்து மகிழ்ந்தார். பிள்ளைகளோடு பிள்ளைகளாக அணைந்து ஈடுபடும் அன்பும் அரவணைப்பும் என்றுமே தென்மொழியன்பர்களுக்குப் பொதுவாகவிருக்கின்ற தன்மைகள். அதிலும் திரு. முல்லைவாணனுக்கு என்னிடமும் குடும்பத்தாரிடமும் மிகுந்த சலுகை! அவர் வரும்பொழுதெல்லாம் என் துணைவி தாமரையுட்பட மூத்த பிள்ளைகள் இளைய பிள்ளைகள் அனைவர்க்கும் கூத்தும் கொம்மாளமும் சொல்லி முடியா. திரு. முல்லை வாயிலாகவும் மடல்கள் வாயில்களாகவும் திரு. அன்பரசனை ஏற்கனவே நாங்கள் நன்கு அறிந்திருந்தோம். எனவே, இக்கால் சிங்கைத் தென்மொழி இரட்டையர்களான இருவரும் இங்கு வந்ததும் தென்மொழி யில்லத்தில் மட்டற்ற மகிழ்ச்சி கரைபுரண்டோடியது.

பாவலர் திரு. அன்பரசன் என்னை முதன்முதல் நேரில் கண்ட அந்த நாள் இரவும், அடுத்த நாள் இரவுகளும் தாமும் தூங்குவதில்லை; என்னையும் தூங்க விடுவதில்லை. ஓயாமல் தென்மொழியைப் பற்றியும் பாவாணரைப் பற்றியும் பாவேந்தரைப் பற்றியும் கதை கதையாகக் கூறச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருப்பார். விடிய விடியக் கொட்டுக் கொட்டென்று இமை மூடாமல் விழிகளை அகல விரித்துக் கொண்டு அவர் கேட்ட தென்மொழிக் கதைகள் ஏராளம். அவற்றுக்கு ஈடாக அவரும் முல்லையும் சிங்கையில் கொண்ட தென்மொழியீடுபாடுகளைப் பற்றியும் அன்பர்கள் பிறரைப் பற்றியும் அன்பரசன் என்பால் சொல்வார். இடையில் இரண்டொரு நாட்கள் காட்டுப்பாடி சென்று பாவாணர் அவர்களையும் கண்டு பேசி மீண்டோம். எல்லா வகையிலும் இவ்விரட்டையர்களின் கடந்த ஆண்டு வருகை என் சிங்கைச் செலவை மேலும் விரைவுபடுத்தியது.

திரு. அன்பரசன் திரு. முல்லைவாணனுக்கு முன்பாகவே சிங்கை புறப்பட வேண்டியிருந்தது. சிங்கை புறப்படுகையில் முல்லையிடம், 'எப்படியாகிலும் ஐயாவை இந்த முறை கட்டாயம் அழைத்து வந்துவிடு' என்று கூறிவிட்டுப் போனார். முல்லையும் ஏற்கனவே இதில் மூவ்வூரமாக ஈடுபட்டிருந்தார். எனவே என் அடிப்படை முயற்சிகள் குறித்து முல்லை முடுக்கமாகச் செயலாற்றினர். அடிக்கடி திருமுல்லைவாயிலுக்கும் கடலூருக்கும், மயிலாடுதுறைக்கும் சென்னைக்கும்

அவர் சென்று, என் எல்லைக்கடவு(Pass port)த் தொடர்பாக முயன்று வந்தார். அதற்காக நிறையப் பொருளைச் செலவிட்டார். சில நேரங்களில் குடும்பத்தில் உள்ள நகைகளையும் ஈடுவைத்தார். எல்லைக்கடவு முயற்சிகள் அவ்வளவு எளிதில் முடிவதாகத் தெரிய வில்லை. இடையில் நின்ற அதிகாரிகள் பலரையும் சரிகட்ட வேண்டி யிருந்தது. அவர்களுக்கு வேறு வாய்க்கரிசி போட்டார். என்னையும் ஓரிருமுறை சென்னைக்கு அழைத்துப் போனார். இறுதியில் எல்லா வகை முயற்சிகளும் முடிந்து எல்லைக்கடவு எங்கள் கைக்கு வர வேண்டியிருந்தது.

அதற்குள் முல்லைக்கு இங்கிருக்க வேண்டிய கால எல்லை முடி வடைந்தது. எவ்வாறேனும் அவர் தம்முடனேயே என்னை அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும் என்று பலவகையிலும் முயன்றார். கப்பல் அல்லது வானூர்திக் கட்டணங்களைக் கட்டு வதற்காக அவர் பலவகையிலும் பாடுபட்டார். கடந்த பிப்ரவரி மாதம் 13-ஆம் பக்கல் சென்னையிலிருந்து புறப்படுவதாக விருந்த கப்பலுக்கு எவ்வாறேனும் என்னை அழைத்துக் கொண்டு போய்விட வேண்டுமென்று துடியாய்த் துடித்தார், முல்லை. போகின்ற பொழுது கப்பலில் போய், வருகின்ற பொழுது வானூர்தியில் வந்து விடலா மென்று நாங்கள் திட்டமிட்டிருந்தோம். கப்பலில் போக முடியா விட்டால் அடுத்துப் புறப்படவிருக்கும் வானூர்தி வழியாக வேனும் என்னை அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்பதும் அவர் திட்டம். ஆனால் அதற்குள் எல்லைக்கடவு கிடைக்காமற் போகவே அவர் தனிததுப் புறப்பட வேண்டியிருந்தது. பிப்ரவரி 13-ஆம் பக்கல் கப்பலில் அவர் ஒருவருக்குத்தான் சீட்டுக் கிடைத்தது. அதன்பின் அவர்மட்டும் தனித்துப் புறப்படும் செய்தி உறுதி யாயிற்று

அவர் தனித்துப் புறப்படுவதற்கு மிகவும் வருந்தினார். பல வகையாலும் பல நாட்களும் தொடர்ந்து முயற்சி செய்தும் பொரு ளாலும் சூழலாலும் என்னோடு புறப்படும் அந்நிலைக்குத் தடை வந்ததே எனறு அவர் கண்கலங்கினார். அக்கால் சிங்கை அன்பர்கள் சிலர் தமிழகத்திலிருந்தும், அவர்கள்பால் திரு. முல்லைவாணன் என் புறப்பாட்டிற்குப் பொருளுதவி பெற முயன்றும் முடியாமற் போனது வேறு அவர் மனத்தை வருத்தியது. எல்லாத் துயரங்களிலிருந்தும் அவர் மீண்டு, பிபரவரி: 12-ஆம் பக்கல் தென்மொழி யில்லத்தி லிருந்து விடைபெற்று, முல்லைவாயில் சென்றார். சென்னையிலிருந்து 13-ஆம பக்கல் புறப்படவிருந்த கப்பல் நாகை வந்து தங்கி அடுத்த நாள் அங்கிருந்து புறப்பட விருந்தது திரு. முல்லை அதில்தான் செல்லல் வேண்டும். அதுவரை எல்லைக்கடவு என் கைக்குக் கிடைக்க வில்லை.

(—தொடரும்.)

# செய்திகள்.

## 1. தேசுமுகிப் பேட்டை-தமிழார்வலர் கூட்டம்:

தி. பி. ௨௲௫ மடங்கல் ௬ ஆம் பக்கல் (22-8-74) இரவு 9 மணியளவில் திருக்கழுக்குன்றம், தேசுமுகிப் பேட்டை நடுநிலைப் பள்ளியில் தமிழார்வலர் கூட்டம் திரு. வேணு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் 'இக்காலத் தமிழர் நிலை' என்னும் பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். புலவர். திரு. தி. நா. அறிவொளி திரு. பல்லவன் ஆகியோர் உரையாற்றினர். கூட்டத்தில் ஆசிரியர்க்குக் கைத்தறியாடை போர்த்தப் பெற்றுத் தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 30 அன்பளிப்பு வழங்கியது குறிப்பிடத் தக்கது.

## ௨. இளங்கோவன்-கலைமணி நீடு வாழி!

தேசுமுகிப் பேட்டையில் கடந்த மடங்கல் ௭ ஆம் நாள் (23-8-74) வெள்ளியன்று தென்மொழியன்பர் திரு. மா. இளங்கோவன் அவர்களுக்கும் செல்வி கலைமணிக்கும் தென்மொழி ஆசிரியர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது. திருவாளன்மார் வேணு (ஊ. ம. தலைவர்), சுந்தரேசன், க. மு; கங்காதரன், க. மு; புலவர். த. சுப்பிரமணியன்; வ. வேம்பையன் புலவர். வே. சண்முகம்; புலவர். தி. நா. அறிவுஒளி ஆகியோர் வாழ்த்துரைத்தனர். இறுதியில் திரு. மா. இளங்கோவன் அனைவர்க்கும் நன்றியுரைக்க மணவிழா இனிது முடிந்தது. மணமக்கள் இன்புற்று நீடுவாழ 'தென்மொழி'யும் வாழ்த்துகின்றது.

## ௩: தேசுமுகிப்பேட்டை-'மறைமலையடிகள் மன்றம்' தொடக்க விழா.

கடந்த மடங்கல் திங்கள் ௭ ஆம் நாள் வெள்ளியன்று (23-8-74) தேசுமுகிப் பேட்டையில் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் முன்னிலையில் 'மறைமலையடிகள் மன்றம்' தொடங்கப் பெற்றது. தலைவராக திரு. கோ. முத்துப் பெருமாள், க. இ; அறி.இ; ஆ.ப அவர்களையும், செயலராக திரு. மு. செல்வம், க.இ; அவர்களையும் செயற்குழு உறுப்பினர்களாக, புலவர். பூங்குன்றன், சு. பழநிவேலன் அறி.இ, வீ. தெய்வமணி, கோ. வில்லவன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

## 4. எழிலன்பன்-பொற்செல்வி நீடு வாழி!

கடந்த மடங்கல் ௧௩ ஆம் பக்கல் (29-8-74) வியாழனன்று திருச்சி கண்டராதித்தத்தில் நெடுநாளைய தென்மொழியன்பரும், தமிழக விடுதலை இயக்க மறவருமாகிய திரு. எழிலன்பன் அவர்களுக்கும், செல்வி பொற்செல்விக்கும் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்புடன் நடை

பெற்றது. மணமக்கள் இன்புற்று நீடுவாழத் தென்மொழி நெஞ்சார வாழ்த்துகின்றது.

## 5. திருமழபாடி அரசுயர் பள்ளி இலக்கிய மன்ற விழா!

திருமழபாடி அரசுயர் பள்ளியில் கடந்த மடங்கல் கூ ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டம் தலைமையாசிரியர் திரு. வா. சு. சங்கரநாராயணன், க.இ; ஆ.ப., அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கியது. பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் 'மாணவரும் திருக்குறளும்' என்னும் பொருள்பற்றி அரியதொரு சிறப்புரையாற்றினார்கள். தமிழாசிரியர் புலவர் இரா. சின்னச்சாமி நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

## 6. மறைத்திரு மறைமலையடிகள் 98ஆம் பிறந்த நாள் விழாவும் மறைமலையடிகள் நூல் நிலைய 16ஆம் ஆண்டு நிறைவு விழாவும்.

சென்னை வள்ளலார் திருவருள் மண்டபத்தில் மடங்கல் கரு ஆம் பக்கல் காரியன்று மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், க.மு., அவர்கள் தலைமையில் விழா, தாமரைச் செல்வர் திரு. சுப்பையா அவர்கள் வரவேற்புரையுடன் தொடங்கியது. மறைமலையடிகளாரின் நூல்களுள் பாடல், கட்டுரை, கதை நாடகம், ஆராய்ச்சி, சமயம் பற்றி முறையே திருவாளண்மார். பெருஞ்சித்திரனார், செல்லப்பனார், எழில்முதல்வனார், ஞானசுந்தரனார், முருகவேளனார் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் படித்துச் சிறப்புச் செய்தனர். நூல் நிலையத் தொண்டு பற்றிப் பேரா. திரு. இராமச்சந்திரனார் உரையாற்றினார்கள். இறுதியில் திரு. இரா. முத்துக்குமாரசாமி நன்றி கூற விழா இனிதே முடிவுற்றது.

## 7. புதுவைத் தமிழ்க் கழக விழா.

உ௦௦௫ மடங்கல் உஉ ஆம் பக்கல் புதுவை வேதபுரீசுவரர் நூல் நிலையத்தில் தமிழ்க்கழக இலக்கியப் பெருவிழா திரு. சிவ. கண்ணப்பர் அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

திரு. தமிழமல்லன், திரு. பன்னீர்ச்செல்வம், திரு. இராமலிங்கம் ஆகியோர் உரைக்குப் பின் தென்மொழி ஆசிரியர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் மிகச் சிறந்த சொற்பொழிவினைச் சுவைபட ஆற்றினார்கள். திரு. வேல் முருகன் நன்றி கூற விழா இனிதே நிறைவெய்தியது.

---

**அடுத்த இதழில் பாவாணரின் நீண்ட அரிய கட்டுரை வெளிவருகிறது!**

---

# ஓ... ஓ... பொதுவுடைமைத் தோழனே!

—பூஙேமேட்டார்—

தமிழக விடுதலை இயக்கத்தைப் பற்றி முதலாளியக் கட்சிகள் தூற்றுவதிலும், குறை கூறுவதிலும் பொருளுண்டு. ஏனெனில் தமிழக விடுதலை இயக்கம் என்பது முதலாளியத்திற்கு எதிரானது; சுரண்டலை எதிர்ப்பது; அடிமை நிலைக்கு எதிராகப் போர் தொடுப்பது; அரசியல், பொருளியல் மற்றும் குமுகாய மொழி, இன அடிமை நிலைகளிலிருந்து தமிழகத்தை விடுவிக்கப் போராடி வருவது. இத்தகைய இயக்கத்திற்கு எதிராகத்தான் முதலாளியக் கட்சிகளும், முதலாளியத்திற்குத் துணை போகின்ற கட்சிகளும் இயங்க முடியும்; வேறு வகையாக அவற்றால் இயங்க முடியாது. ஆனால் பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும், மார்க்கியத்தையும், இலெனினியத்தையும் பின்பற்றுவோர் என்றும் தங்களைப் பறைசாற்றிக் கொள்வோர், விடுதலை இயக்கத்தின் மீது 'இன, மொழி' வெறி என்ற சேற்றினை வாரி இறைப்பதைத்தான் விளங்கிக் கொள்ளவும் முடியவில்லை; பொறுத்துக் கொள்ளவும் முடியவில்லை. அவரின் நிலை பொதுவுடைமைக்காரர்தாமா அவர் என்னும் ஐயத்தை நம்முள் ஏற்படுத்துகிறது.

தமிழக விடுதலை இயக்கத்திற்கு எதிராகப் பொதுவுடைமைக்காரர் (பொதுவுடைமைக்காரர் என்று இங்குக் குறிப்பிடப்படுவோர் இந்தியப் பொதுவுடைமை; மார்க்கியப் பொதுவுடைமை மற்றும் பிற பொதுவுடைமை இயக்கங்களைச் சேர்ந்தவரையே.) மேற்கொள்ளும் நிலைதாம் என்ன? தமிழக விடுதலை தேவையற்றது என்பதற்கு அவர் கூறும் கரணியங்கள்தாம் எவை? தமிழக விடுதலை இயக்கம் என்னும் பெயரைக் கேட்டவுடனேயே அஃது ஓர் இன வெறி இயக்கம் என்று கூறுவதே பொதுவுடைமைக்காரரின் பொதுவான நிலை. 'பார்ப்பனர் என்போர் ஒரு குலத்தைச் சேர்ந்தவர். தமிழர், பார்ப்பனர் எனப் பேசுவதெல்லாம் குலவெறியைத் தூண்டி விடுவது; தமிழகவிடுதலை என்பது இந்தியா என்னும் நாட்டைத் துண்டாடுவது; அஃது இந்தியாவிலுள்ள தொழிலாளர் வகுப்பினைச் சிதறடித்து முதலாளியத்திற்குத் துணை போகும் முயற்சி'—இவை அவர் கூறும் கரணியங்களில் முகாமையானவை. இன்னும் அவரிடம் நெருங்கிச்

சென்று ஆரியர், திராவிடர் போராட்டம்பற்றிக் கேட்டால், "ஆரியர், திராவிடர் போராட்டம் என்பதெல்லாம் வரலாற்றைப் புரட்டுவது, வரலாற்றைத் தலைகீழாக மாற்றிக் கூறுவது; ஆரியர் இந்தியா விற்குள் நுழையும்பொழுது நாகரிகமடைந்த 'நாட்டியலினம்' (தேசிய இனம்) என்று எதுவும் இங்கு இருக்கவில்லை; காட்டு விலங்கு நிலையில் வாழ்ந்து வந்த மக்கள் தொகுதியே இருந்தது. அத்துடன் ஆரியர் கலந்த பிறகே ஏங்கெல்சுகூறும் மாந்த வளர்ச்சி நிலையில் படிப்படியாகவளர்ந்து 'இனம்' என்ற நிலையை அடைகிறுர். எனவே ஓரினத்தை இன்னோர் இனம் அடிமை கொண்டது என்பதற்கே பேச்சில்லை. ஆரியர், திராவிடர் போராட்டம் என்று வரலாற்றைப் பார்ப்பது பொருள்முதல் கண்ணேட்டத்திற்கு எதிரானது. ஆரியர், திராவிடர் என்பதே ஆங்கிலேயன் இந்தியத் தொழிலாளர் வகுப்பினைச் சிதறடிக்கக் கையாண்ட விரகு" என்று விளக்கம் அளிப்பர். மாக்சுமுல்லர் அடியொற்றி உலக மொழி மூலம் தேடித் தமக்குக் கிடைத்த சில நூல்களின் மூலமே உலகப் புகழ் பெற்ற 'ஒப்பியன் மொழி நூல்' எழுதிய கால்டுவெல்லையே ஆரியர், திராவிடர் சிக்கலை எழுப்பிய முதல்வர் என்றும் பொதுவுடைமைக் காரர் கூறுவர். (தோழர் பாலதண்டாயுதம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் பற்றிக் கூறும் பொழுது 'மார்க்கிய ஒளி' என்ற இதழில் அவ்வியக்கத்தை கால்டுவெல்லின் இனக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய ஓர் இயக்கம் என்று எழுதுகிறுர்.)

இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்த தோழர் தாங்கே எழுதுகிறுர், "ஆரியப் பகைவர் வரும் முன்பு இந்தியாவில் திராவிடர்தாம் வாழ்ந்து வந்தனரா என்பது நமக்குத் தெளிவாகத் தெரியாது. மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் திராவிடர் உடையதா, அஃது ஆரியரால்தாம் முற்றுகையிடப்பட்டு அழிக்கப் பட்டதா என்பதும் தெரியாது." (We do not yet clearly know whether it was the Dravidians who occupied India before the 'alien Aryan's 'came. we do not yet know whether Mohenjo Daro and Harappa civilization represents Dravidians and whether they were, so to say invaded and destroyed by Aryans).

"பிரித்தானிய வரலாற்றுசிரியர் நம்மைப் பல நிலைகளில் தவருன பாதைக்கே இட்டுச் சென்று உள்ளனர். நாம் இக் கருத்துக்

குறித்துக் [ஆரியர், திராவிடப் போராட்டம் பற்றி] கவனமாக ஆய்வு செய்ய வேண்டும்". ["The British Historians have misled us on many points and we have to do careful research on this question"—'India from Primitive Communism to Slavery'. என்னும் நூலிலிருந்து.] தோழர் தாங்கே இதே நூலில் திராவிடர், ஆரியர் வரும் முன்பே உயர் நாகரிக நிலையை அடைந் தவர் என்பதற்குத் தக்கச் சான்றுகள் இல்லை என்றும் கூறுகிறார். ஆரியர் வரும் முன்பு 'குடிமகன்' என்றழைக்கும் நிலையில் எவரும் இந்தியாவில் இருக்கவில்லை. (No recognised citizans before Aryans) என்று எழுதுகிறார். இந்தியாவின் தொல்வரலாறு முழு வதும் ஆரியர் மீமிசைக் கதைகளில் அடங்கியிருக்கிறது என்பதும் அவரது கூற்றே. தோழர் தாங்கே இதே நூலில் பக்கம் 22-இல் 'இந்திய வரலாறு என்பது ஆரியருடைய வரலாறே' என்று அடித்துக் கூறுகிறார். அவர் எழுதுகிறார், "நாம் இன்று விளங்கிக் கொள்வது போலவே கிரேக்க, உரோமர்களின் வரலாறு கிரேக்க, இத்தாலியின் வரலாறே. ஆனால் இன்று நமக்குத் தெரி கின்ற அளவில் தொடக்கக் கால இந்திய வரலாறு என்பது முகாமை யாக ஆரியர் உடையதே. இத்துடன் இந்தியா ஒரு நாடு என்ற நிலையில், பின்னால் இணைந்து கொண்ட மக்களின் வரலாறும் அடங்கும்" (The history of Greeks and Romans is first a history of Italy and Greece as we understand it to-day. But the early history of India as known to-day is a history mainly of the Aryan tribes and people whose story later on become the history of India as a country.)

இந்திய வரலாறு என்பது தோழர் தாங்கேயின் கூற்றுப் படியும், மற்ற பொதுவுடைமையாளரின் கூற்றுப்படியும் ஆரியருடைய வரலாறுதானா என்ன? ஆரியர், திராவிடர் போராட்டம் என்பது ஆங்கிலேயர் செய்த விரகுதானா என்ன?

பொதுவுடைமைக்காரனுக்குச் சரியான வரலாற்றுக் கண்ணோட்டம் இருக்க வேண்டும். அவன் வரலாற்றில் தெளிவான அறிவு பெற்றிருக்க வேண்டும். மெய்ப்பாட்டு நிலையில் (சித்தாந்த ரீதியில்) அவன் வலு உள்ளவனாக இருக்க வேண்டும். வெறுமனே 'முதலாளிகள் ஒழிக' என்று முழக்கமிடுவதில் பொதுவுடைமை

இங்கு வந்து விடாது. தான் வாழ்கின்ற நாட்டின் வரலாற்றையும் அதன் சிறப்புச் சூழ்நிலைகளையும் உணர்ந்து கொண்டு அதற்கேற்பத் தனது நடைமுறைப் போர் முறைகளை வகுத்துக் கொள்கின்ற பொதுவுடைமையாளனே தன்னுடைய நிலையில் வெற்றி பெறுவான். கடந்த பல ஆண்டுகளாக இங்குப் பொதுவுடைமை இயக்கங்கள் பற்பல இயங்கியும், அவை வெற்றி பெறாததற்குக் கரணியம் இந்திய வரலாற்றைத் தவறாக விளங்கிக் கொண்டதும், முரணாக உணர்ந்து கொண்டதுமே ஆகும். எனவேதாம் அவ்வியக்கங்களின் போர் முறைகள் எல்லாம் புலியைத் தேடி எலியைப் பிடித்தக் கதையாகவே உள்ளன.

இந்திய வரலாற்றில் தெளிவைப் பெறுவதற்கும் சரியான கண்ணோட்டத்தைக் கொள்வதற்கும் நமது ஆய்வைக் 'குமரிக் கண்டத்தில் இருந்து' தொடங்க வேண்டும். வரலாற்றை ஆய்வு செய்யத் தொடங்கும் பொழுது முதலில் அடிப்படைச் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு, தீர்வின் முடிவில் நமக்குக் கிடைக்கின்ற சரியான அடிப்படையை வைத்துக் கொண்டு மேலே செல்ல வேண்டும். அவ்வாறு அடிப்படைச் சிக்கல்களைத் தீர்க்காமல் வரலாற்றுக்குள் நுழைந்து ஒரு முடிவை அறிவிப்பது என்பது தீங்கையே விளைவிக்கும். 'குமரிக் கண்ட உண்மை' என்பது அத்தகைய ஓர் அடிப்படைச் சிக்கலே. இச் சிக்கலுக்குத் தீர்வு கண்டால்தான் ஆரியர், திராவிடர் போராட்டம் உண்மையானதுதானா என்பதை முடிவு செய்ய முடியும். அது மட்டுமன்று, தமிழக விடுதலை தேவை தானா என்பதற்கும் இச் சிக்கலைத் தீர்ப்பதின் வழியேதான் சரியான விளக்கத்தை அளித்திட முடியும். ஆனால் இங்குள்ள பொது வுடைமைக்காரர் இச்சிக்கலைப் பற்றி அக்கறையே எடுத்துக்கொள்வதில்லை. பொருள்முதல் கண்ணோட்டத்துடன் வரலாற்றை நோக்குவதாகத் தம்மைப் பறைசாற்றிக்கொள்ளும் இந்தியப் பொது வுடைமையைச் சார்ந்த வரலாற்றாசிரியர்களின் பொதுவான நிலை ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்பதாகத்தான் இருக்கும். இதற்குக் கரணியம் மேற் சொன்ன அடிப்படைச் சிக்கலைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வரலாற்றுக்குள் நுழைவதே. அவர் இந் நிலவரலாற்றில் ஓரினம் இன்னோரினத்தை அடிமை கொண்டதை ஆய்விற்கே எடுத்துக் கொள்வதில்லை. ஒரு வளர்ச்சி யடைந்த இனம் மற்றோரினத்திற்கு அடிமைப் பட்டதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இந் நிலத்தில் தொல் பொதுவுடைமை

நிலவிய காலத்தையும், அடிமை நிலைக் காலத்தையும், நிலக்கிழார் ஆட்சிக் காலத்தையும், முதலாளியக் காலத்தையும் தெளிவாகப் பகுத்து விளக்கிட முடியாது; இங்குள்ள பொருளியல் அமைப்புகளையும், குலப்பாகுபட்டு முறைகளையும் விளக்கிட முடியாது.

இனி அடிமை நிலை என்பது இங்கு நிகழவே இல்லை என்று, ஆய்வு செய்யாமலே முடிவு செய்து கொண்டு வரலாற்றுக்குள் புகுவது குழப்பத்தையே விளைவிக்கும். இதற்குச் சரியான காட்டு, இந்தியப் பொதுவுடைமையாளரின் வரலாற்று நூல்களே. காட்டாகத் தோழர் தாங்கேயின் 'தொல் பொதுவுடைமையிலிருந்து அடிமை நிலைக் கால இந்தியா' என்னும் நூலையே எடுத்துக் கொள்வோம். இந்நூலின் முன்னுரையில் ஆரியர், திராவிடர் போராட்டம் ஆய்விற்குரியது என்கிறார்; பிறகு அஃது ஆங்கிலேயரால் திரித்துக் கூறப்பட்டது என்கிறார். 'நாகரிகமடைந்த' ஓரினம் ஆரியர் வருகைக்கு முன்பு இருந்ததா என்பது ஐயத்திற்குரியது என்று கூறிவிட்டு, ஆரியருக்கு முன்பு 'குடிமகன்' என்பவனே இங்கில்லை என்கிறார். என்னே முரண்பட்ட நிலை! முன்னுரையில் இவ்வாறாக ஆற்றில் ஒரு காலும், சேற்றில் ஒரு காலும் வைத்துக் கொண்டு நூலின் உள்ளே இந்தியாவின் வரலாறு, ஆரியரது வரலாறே என்று நிறுவ முயல்கிறார். ஆரியரின் மறைகள், மீமிசைக் கதைகள் எல்லாம் இந்தியா தொல் பொதுவுடைமை நிலையிலிருந்து எவ்வாறு அடிமை நிலைக்கு வளர்ந்தது என்பதைக் காட்டுபவையே என நிறுவ முயல்கிறார். மேற்கண்ட முயற்சி மறைகள், மீமிசைக் கதைகளில் காணப்படும் போர்க் குறிப்புகள் ஆரியர் திராவிடர் போராட்டத்தைத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடுபவையே என்னும் உண்மையை முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயல்வதைப் போன்று மறைக்க முயலும் ஒரு முயற்சியே ஆகும். தோழர் தாங்கே நெஞ்சுரத்துடன் ஆரியர், திராவிடர் போராட்டம் பொய்யானதே என்று கூறவில்லையெனினும் அவரது கருத்து அஃதே என்பது தெளிவு. ஆனால் அதே காலக் கட்டத்தில் வெளிவந்த 'சோசலிசுட்டுத் தத்துவங்கள்' என்ற நூலில் தோழர் சீவா எழுதுகிறார், (தோழர் தாங்கேயின் நூல் வெளிவந்த ஆண்டு 1949; சீவாவின் நூல் 1948): "ஆரியர்கள் திராவிடர்களைத் தோற்கடித்ததும் விரகுகள் (சூழ்ச்சிகள்) செய்தும் அடிமைப்படுத்திய, தாழ்மைப்படுத்திய கதை உலகறிந்ததே. இந்தியாவில் இன்றைய குமுகாய (சமூக) அமைப்

பிலும், அடிமை முறையின் எச்சங்கள் காணக் கிடக்கின்றன. தமிழ் நாட்டிலும் சரி, ஈழ நாட்டிலும் சரி, தாழ்த்தப்பட்ட பள்ளர், பறையர், நளவர் ஆகியவருடைய வாழ்க்கை நிலையை ஆராய்ச்சி செய்து பாருங்கள். திராவிடர் அடிமை முறையின் இழிவான அஞ்சத்தக்க (பயங்கரமான) மிச்ச சொச்சம் தான் அது". ஓரியக்கத்தைச் சேர்ந்த வரிடையே முகாமையான ஒன்றினைப்பற்றி இருவேறுபாடான கருத்துகள்! பொதுவாக எல்லா வரலாற்றுசிரியர்களிடையேயும் இந் நிலையைக் காணலாம். அவர்கள் ஒரு தெளிவான முடிவுக்கு வர முடியாது. மற்ற நாட்டுப் பொதுவுடைமை வரலாற்று ஆசிரியர் தொல் பொதுவுடைமைக் காலம், அடிமை நிலைக் காலம், அரசுத் தோற்றக் காலம். நிலக்கிழாரின் ஆட்சிக் காலம், முதலாளியக் காலம் முதலியவற்றைத் தெளிவாகப் பகுத்து அளித்திடுவதைப் போல் இவர்களால் செய்ய இயலாது. கழகக் காலத்தை அரசுத் தோற்றக் காலம் என்பர்; வள்ளுவத்தையும் இக்காலத்ததே என்பர்; தொல்காப் பியத்தைக் கழகக் காலத்திற்கு முந்தியது என்பர்; பிந்தியதும் என்பர்.

கழகக் கால அகப்புற நூல்களில் அக்கால அரசியல், பொருளியல், குமுகாய அமைப்புகளையும், பொருள் விளைவிப்பு முறைகளையும் [உற்பத்தி முறைகளையும்] செவ்வனே அறிந்து கொள்ளப் போதுமான செய்திகள் விரவிக் கிடக்க இவர் குழப்பு கின்ற குழப்பம் நமக்கு நகைப்பையே விளைவிக்கும்.

இது கிடக்க, 'குமரிக் கண்டச் சிக்கல்பற்றி' இதுவரை வெளி வந்துள்ள ஆய்வுகளில் ஆரிய இனவெறி வரலாற்றுசிரியரையும் ஆரிய மாயைக்கு அடிமைப் பட்ட வரலாற்றுசிரியரையும் தவிர, நடு நிலை வரலாற்று அறிஞர் அனைவரின் ஆய்வுகளும் குமரிக்கண்ட உண்மையையும் அந்தத் 'தமிழர்' என்ற இனத்தவர் வாழ்ந்து வந்ததையும், அவ்வினத்தவர் அந் நிலத்தில் வாழ்ந்து வந்த காலத் திலேயே 'நாகரிகத்தின்' அத்துணை நிலைகளையும் பெற்று விட்டதை யும் ஒத்துக் கொள்கின்றனர். இக்கால் மொழியியலில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் தமது அஃகி அகன்ற மொழி நூல் அறிவின் துணைக் கொண்டும், பிற துறைகளின் ஆய்வு முடிவுகளைக் கொண்டும், இவ்வுண்மைக்கு மேலும் வலியூட்டி உள்ளார். பாவாணர் அவர்களின் ஒப்புவமையற்ற

ஆய்வால் நிறுவியுள்ள வரலாற்று உண்மைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் இந்திய வரலாற்றைப் பொருள் முதல் கண்ணோட் டத்துடன் நோக்கினாலும் சரி; வேறு எவ்வகைக் கண்ணோட் த்துடன் நோக்கினாலும் சரி அக் கண்ணோட்டம் தெளிவற்ற ஒன்றாகவே அமையும். மார்க்சும், எங்கெல்சும் மீண்டும் ஒரு முறை இங்குப் பிறந்து வரினும் அவர் முதலில் பாவாண ரிடம் பாடம் கேட்ட பிறகே இந்திய வரலாற்றுக்குள் நுழைய வேண்டும். இல்லையெனின், அவராலும் இந்திய வரலாற்றுச் சிக்கல்களுக்குத் தீர்வு காண முடியாது.

குமரிக் கண்டத்திலிருந்து, அஃதாவது வரலாற்றைத் தொடங்க வேண்டிய சரியான இடத்திலிருந்து வரலாற்றைத் தொடங்கும் போது நமக்குக் கிடைக்கின்ற உண்மைகள் எவை? குமரிக் கண்டம் கடல் கோள்களால் அழிவுற அங்கிருந்து வடக்கில் வந்து பனிமலை உயர்ந்த பின்பு நாம் இன்று குறிக்கும் இந்தியா என்னும் இப்பெரு நிலத்துக்குள் வாழ்ந்து வந்தவர் தமிழரே. பாதிரிபுரம் [பாடலிபுரம்] காளிக் கோட்டம் [கல்கத்தா], இன்னும் 'வேள்' என்ற வேராலும் 'ஊர்', 'பட்டினம்' என்ற பெயராலும் குறிக்கப்படும் அனைத்துச் சொற்களும் தெள்ளத் தெளிவாகக் காட்டும். ஆரியர் என்பவர் வந்தேறிகள். இவர் இந்நிலத்திற்கு வரும் முன்பு தோழர் தாங்கே குறிப்பிடுவதைப் போல் அல்லாமல் முற்றிலும் 'நாகரிகமடைந்த' அஃதாவது மாந்த வளர்ச்சிக் கட்டத்தில் நாடு, இனம், மொழி, பண்பாடு, அரசு என்ற கட்டத்தைக் கடந்துவிட்ட மக்களே வாழ்ந்து வந்தனர். ஆரியர். தங்களுக்கே உரிய நாடு, மொழி, இனம், பண்பாடு, அரசு, ஆகியவற்றைக் கொண்ட ஒரு நாட்டியல் இனத்தையே தங்களுக்கு அடிமைப்படுத்திக் கொள்கின்றனர். வீரத் தமிழர் சீவா குறிப்பிடுவதைப் போல் மறைகள் மீமிசைக் கதைகள் அனைத்தும் தமிழரை அடிமை கொண்ட கதையைப் பாடுபவையே. அன்று தமிழரை அடிமை கொண்ட ஆரியர் இன்றுவரை தொடர்ந்து எல்லா நிலைகளிலும் அவரை அடிமைப்படுத்தியே வைத்துள்ளனர். ஆரிய ஆளுமைக்குட்படாத அனைவருக்கும் இவ்வுண்மை தெளிவாகத் தெரியும்.

ஆரியருக்கு அடிமைப்பட்ட தமிழர், இழந்த செல்வங்களையும், தொலைத்த பெருமையையும், பட்ட இன்னல்களையும், எழுதத் தொடங்கினால் இக் கட்டுரை ஒரு முடிவுக்கே வராது. தமிழர் தெற்கு

நோக்கித் தள்ளப்பட்டனர். அவரின் நிலம் அவரிடமிருந்து பிடுங்கப் பட்டது; வடக்குப் பகுதி முழுவதும் 'ஆரிய வர்த்தனம்' ஆகியது தமிழரிடையே குலப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு அவர் சிதறடிக்கப் பட்டனர். தமிழரின் குறிப்பிட்ட தொகையினர் வேறு இனங்களாகத் திரிந்து ஆரியத்திற்குள் கரைந்து விட்டனர். தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகள் தோன்றின. தமிழருடைய இலக்கியச் செல்வம் ஆரியரிட்ட 'ஐயமாக' [பிச்சையாக] ஆக்கிக் காட்டப்பட்டது. தமிழருடைய 'குமரி நாடு' 'குமாரி'யிலிருந்து வந்த தாகக் காட்டி அவர் நாடற்றவர் ஆக்கப்பட்டனர்; சேர, சோழ, பாண்டிய அரச மரபினர் ஆரிய மரபினரென பொய்ப்பிக்கப்பட்டு வரலாறு அற்றவர் ஆக்கப்பட்டனர்; தமிழருடைய 'நாகரிகம்' ஆரிய ருடையதே எனப் புரட்டப்பட்டு நாகரிகமற்றவர் ஆக்கப்பட்டனர். இலக்கிய இலக்கணம் வடமொழியை அடிப்படையாகக் கொண்டவை யெனக்கூறி இலக்கிய இலக்கணமற்றவர் ஆக்கப்பட்டனர்; தமிழி லுள்ள பேரெண்களும், சிற்றெண்களும் வடமொழி என்றே கூறி அறிவிலி ஆக்கப்பட்டனர்; தமிழ் எழுத்துகளே வேற்று மொழியிலி ருந்து தோன்றியன எனத் திரித்து மொழியற்றவராக்கப்பட்டனர். இவ்வாறுகத் தமிழருடைய உள்ளம், உயிர் அனைத்தும் ஆரிய ருடைமையே என நிறுவினர். தமிழருடைய 'சிவனியம்', 'மாலியம்' 'இந்துவாகி' அடிமைப்படுத்தப்பட்ட தமிழருக்கு அடிமை வாழ்வே நெறி என்று கட்டியங் கூறி நின்றன.

ஆரியரைத் தொடர்ந்து வந்த இசுலாமியரிடமும், ஆங்கிலேய ரிடமும் எஞ்சியிருந்த செல்வங்களையும் இழந்து விட்டு ஓட்டாண்டி ஆகி நின்றனர் தமிழர். கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த கற்பையும் இழந்து விட்டு "முழுப் பரத்தையாகி' நின்றது இத் தமிழ்த்தாய் நிலம். இவ்விடத்தில் ஒன்று குறிப்பிடத்தக்கது. இசுலாமியர் இங்குப் படையெடுத்துவந்த காலத்திலும் சரி, ஆங்கிலேயர் இந் நாட்டை ஆண்டு வந்த காலத்திலும் சரி, ஆரியரின் ஆளுமை, தமிழரின மேல் தொடர்ந்து இருந்து வந்தது என்பதே அது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தைச் சிறப்பாக எடுத்துக் கொண்டு அக் காலக் கட்டத்தை நோக்க வேண்டும். ஏனெனில் அக்காலத் தில்தான் இந் நிலத்தில் எதிர்எதிரான இரு நிகழ்ச்சிகள் நடந் தேறின. ஒரு புறத்தில் தமிழருக்கு மிகப் பெரிய குழி பறிக்கப்பட்டது. 'இந்தியத் தேசியம்' என்ற குழியே அது. அக்குழிக்குள் தமிழர்

அகப்பட்டுக் கொள்ளவும் செய்தனர். ஆனால் அதே சமயத்தில் அத்தனைத் தமிழரும் அக் குழிக்குள் விழுந்து விடாமல் தடுத்து நிறுத்தும்படி ஒரு விழிப்புணர்ச்சியும் அவரிடையே ஏற்பட்டது. நாம் தமிழர்; நமக்கென்று ஒரு மொழி உண்டு; ஒரு பண்பாடு உண்டு; ஒரு வரலாறு உண்டு என்ற உண்மைகள் ஆங்கிலக் கல்வியின் பயனால் அவருக்குத் தெரிய வந்தன. இவ் விழிப்புணர்ச்சி குறிப்பிடத்தக்க தமிழரை ஆரியக் குழிக்குள் விழுந்து விடாமல் தடுத்து நிறுத்தியது. [இவ் விழிப்புணர்ச்சிக்கு உருவம் கொடுத்ததே பெரியாரின் 'தன் மதிப்பு' இயக்கம். இவ் விழிப்புணர்ச்சியின் விளைவே திரு வி.க, வ.உ.சி போன்றோரின் பேராயவெதிர்ப்பு.] இவ் விழிப்புணர்ச்சி தொடர்ந்து செயல்பட்டு ஆரியக் குழிக்குள் விழுந்து விட்ட தமிழரைப் படிப்படியாக மேலேற்றி வருகிறது. விரைவில் தமிழ் நிலமும், மொழியும், இனமும் ஆரியத்திலிருந்து விடுவிக்கப் படும். நுனிப்புல் மேய்கிறவர்க்கு இவ்வுண்மை தெரியாமல் போனாலும் போகலாம். 'இந்தியா'; 'இந்தியன்' என்று சொல்லியே வந்தவருக்கு 'தமிழ் நாடு' 'தமிழன்' என்று சொல்வதில் மருட்சி ஏற்பட்டாலும் ஏற்படலாம்; சிலருக்கு வயிற்றைப் புரட்டினாலும் புரட்டலாம். ஆனால் 'தமிழக விடுதலை என்பது வரலாற்றின் வளர்ச்சிப் போக்கிலே எந்த ஓர் ஆற்றலாலும் தடுத்து நிறுத்த முடியாத ஒரு மெய்ம்மை' என்பதை அவருக்குச் சொல்லியே ஆக வேண்டும்.

இந்த வரலாற்றுண்மைகள் இங்குள்ள பொதுவுடைமைக்காரர் அனைவருக்கும் தெரியாமலா போய் விட்டது? இந்த உண்மைகளை அவர் உணரவில்லையா என்ன? உணர்ந்திருந்தால் ஏன் தமிழக விடுதலைக்குக் குரல் கொடுக்காமல் இருக்கின்றனர்? தமிழக விடுதலை என்றாலே ஒரு வகையாகப் பார்க்கின்றனர்? எள்ளி நகையாடுகின்றனர்? இதற்கு விடை, தோழர் தாங்கேயையும் தோழர் சீவாவையும் எடுத்துக் கொண்டு பார்த்தாலே கிடைக்கும். அவரின் நேர்முரணான கருத்துகளே சரியான விடையைக் கொடுக்கும். தோழர் தாங்கே வட நாட்டுப் பார்ப்பனர். ஆகையால் அவர் ஆரிய இன வரலாறே இந்திய வரலாறு என்று சொல்லுவதில் வியப்பில்லை. தோழர் சீவா தமிழர்; அதுவும் வீரத்தமிழர், எனவே ஆரியரையும் திராவிடரையும் வேறுபடுத்தவே செய்வார். ஆனால் பொதுவுடைமைக் கட்சியில் சீவாவைப் போன்றவரின் குரல் அமிழ்ந்தே வந்திருக்கின்றது. ஏனெனில், இந்தியாவிலுள்ள மற்ற அரசியல் கட்சிகள்

போலவே இந்திய பொதுவுடைமைக் கட்சிகளும் ஆரிய ஆளுமைக்குட்பட்டவையே! அக் கட்சியில் மேலாண்மை செலுத்துவோர் அனைவரும் ஆரியர்களே; அல்லது ஆரிய இன அடி வருடிகளே. இப்படிச் சொல்வதால் அங்குள்ளோருக்குச் சினம் பொத்துக் கொண்டு வந்தாலும் வரலாம். தங்களின் முகமூடி கிழிக்கப்படும்போது, "ஆ! நம் உண்மையான உருவம் தெரிந்து விடுமே" என்னும் அச்சத்தினுல் சினம் பொங்கி வருவது இயல்பு–தான். அன்னுர் எப்படி ஆரிய இனத்திற்குப் பரிந்து பேசுபவர் என்பதற்கு, தோழர் முத்தையாவையும் அவர் நூற்களையும் எடுத்துக் கொண்டு பார்த்தாலே விளங்கும். தோழர் முத்தையா தம்முடைய இலக்கிய ஆய்வுகளுக்கு வையாபுரி(ப்பிள்ளை)யின் பிறங்கடைகள் திரித்துவிட்ட அடிப்படைகளைத்தாம் எடுத்துக் கொள்வார். ஒரு சிறு எடுத்துக்காட்டு, "ஐயர் யாத்தனர் கரணியம் என்ப' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் தர வந்த முத்தையா 'ஐயர்' என்ற சொல்லிற்கு 'பார்ப்பனர்' என்றே பொருள் தருகிறுர். உண்மையில் அவரொரு பொதுவுடைமைக்காரராக இருந்திருந்தால் பாவாணரின் 'ஐயர்' என்ற சொல்லுக்குரிய விளக்கத்தையும் எடுத்துக் காட்டி அஃது தவறென்றன்றோ நிறுவ வேண்டும்? ஆரியப்பார்ப்பனர் அளித்த விளக்கத்தையே முத்தையாவும் அளிப்பதன் நோக்கம் என்ன? தமிழர் விலங்காண்டிகளாக வாழ்ந்தவர்; ஆரியரே அவருக்கு நாகரிகத்தைக் கற்றுத் தந்தவர் என்று நிறுவத் தானே! இவர் பொதுவுடைமைக்காரரா? இவர் இன வெறியரா? அல்லது நாம் இன வெறியரா? ஓர்ந்து பார்க்கட்டும் உண்மைப் பொதுவுடைமை நெஞ்சங்கள்! வானமாமலையும் அவரைச் சேர்ந்த 'ஆராய்ச்சிக்' குஞ்சுகளும் பாவாணரின் ஆய்வு முடிவுகளைத் தவறென நிறுவ அணியமாயுள்ளனரா?

ஓர் உண்மைப் பொதுவுடைமைக்காரர் தம் கருத்துகளுக்கெதிராக வேறு கருத்துகள் வரும்போது, அக் கருத்துகளை ஏரண [தருக்க] வகையில் நின்று மறுப்பதுதானே சரியானது. ஆனல் இவர் பொதுவுடைமைக்காரராக இருந்தால்தாமே! பொதுவுடைமை என்ற முத்திரையைக் குத்திக் கொண்டு, சிவப்பு வண்ணத்தைத் தங்கள் முகத்தில் பூசிக் கொண்டு, ஆரியத்திற்கும், முதலாளியத்திற்கும், தில்லி முற்றுளுமைக் (ஏகாதிபத்தியம்)கும் துணைப் போகின்ற முதலாளிய ஓர்மையாளர்தாமே இவர்!

தொழிலாளர் உலகத்தின் எந்த மூலையில் தொழிலாளர் துயருற்றாலும், அடக்குமுறைக்கு ஆளானாலும் அவருக்குத் துணையாகக் குரல் கொடுக்கும் பொதுவுடைமை இயக்கம், அஃது உண்மையிலேயே பொதுவுடைமை இயக்கமாக இருப்பின். ஆனால் இங்குப் பொதுவுடைமையின் பெயரிலுள்ள இயக்கங்கள் இலங்கையில் தோட்டத் தொழிலாளர்கள் அடித்துக் கொல்லப்பட்டு வருகின்றார்களே, இந்நிலைபற்றி என்ன கருத்தறிவித்துள்ளன? நாடற்ற ஏதிலிகளாய் அந்தத் தொழிலாளர் விரட்டப் படுகின்றனரே, அது–பற்றி என்ன செய்து கொண்டிருக்கின்றன வியத்நாமுக்கு, சிலிக்குக் குரல் கொடுக்கத் தெரிந்தவருக்கு (வியத்நாம் தொழிலாளருக்குக் குரல் கொடுப்பது தவறெனக் கூறவில்லை. நாம் அவரைவிட உரத்துக் குரல் கொடுக்கின்றோம்.) இலங்கைக்கு மட்டும் ஏன் குரல் கொடுக்கத் தெரியவில்லை. உகாண்டா ‘இந்தியர்களுக்காக’ பாராளு மன்றத்தில் குதித்தவர் இலங்கை ‘இந்தியரின்’ நிலை குறித்து அமைதியாய் இருப்பதன் பொருளென்ன? இலங்கையில் இருப்பவர் தமிழர் என்பதுதானா? அவ்வினத்தின் மீது அவ்வளவு வெறுப்பா?

இலங்கையில் நடந்த தமிழ் மாநாட்டின்போது ஏற்பட்ட அரத்தக்களறிபற்றி ‘சன சக்தி’ அஃதோர் இனவெறி மாநாடு, அதன் விளைவே அவ்வரத்தக்களறி என்றெழுதியது. ஒரு மொழிக் கருத்தரங்கு மாநாட்டை இன வெறியைத் தூண்டிவிடும் மாநாடு என அழைக்கும் சனசக்திக்காரரையா பொதுவுடைமைக்காரர் என்றழைப்பது? தமிழ், தமிழன் என்ற ஒலி கேட்டாலேயே அஃது இனவெறி என்று அலறுகின்ற மடையர்களே, இந்திய வரலாறே ஆரிய வரலாறுதான் என்று வாலாற்றையே புரட்டித் தலைகீழாகக் கூறுபவன் எத்தகையவன்? அவன் இன வெறியனில்லையா? அண்மையில் வெளிவந்த ‘செம்மலரில்’ முத்தையன் என்ன எழுதியுள்ளார் தெரியுமா? **“தமிழ் நாட்டு மக்களும் கேரள மக்களும் ஏன் இந்தியாவின் பல்வேறு நாட்டியல் [தேசிய] இன மக்களும் ஒரே நாகரிக [!] வழித் தோன்றல்கள்தாம்... இந்திய நாட்டுப் பல்வேறு (தேசிய) நாட்டியல் இன மக்களின் நாகரிக பண்பாடுகளும் ஒரே தன்மை வாய்ந்–தவைதாம்.” செம்மலர் மே 1974.** ஆரிய இனத்திலிருந்துதான் மற்ற இனங்கள் தோன்றி வளர்ந்தன என்பதைச் சொல்லாமல் அல்லவா சொல்லியுள்ளார். இவர் உலகத்திலுள்ள எல்லாத் தொழிலாள

ரையும் 'ஒன்றே' என்று பார்க்கும் 'உலக நேயம்' (சர்வதேசியம்) கொண்டவரா?

அரசியல் அடிமைக்குட்பட்ட ஒரு நாட்டிலுள்ள பொதுவுடைமை இயக்கம் எப்படி இயங்க வேண்டும்? முதலில் அந் நாட்டை அரசியல் விடுதலை அடையச் செய்திட அல்லவா முனைந்து நின்று தொண்டாற்ற வேண்டும். அரசியல் அடிமையிலிருந்து விடுபட்டால்தானே அங்குப் பாட்டாளி வகுப்பு வல்லாட்சியை ஏற்படுத்திட முடியும். இதை மார்க்கியம், இலெனினியம் படித்த ஒருவனுக்கு விளக்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவையே இல்லை. ஆனால் இங்கு நடப்பது என்ன? தமிழகம் இன, மொழி, குமுகாயம் ஆகியவற்றில் ஆரிய ஆளுமைக்கும் அரசியலில் தில்லி முற்றாளுமைக்கும், பொருளியலில் வடநாட்டுப் பெரும் முதலாளிகளுக்கும் அடிமைப்பட்டு கிடக்கிறது. தமிழர்தம் மொழி வளர்ச்சிக்கு வழி இல்லை. அவர் கொட்டி அழுகின்ற வரிப் பணமெல்லாம் ஓரின மொழிக்கென்று செலவிடப்படுகிறது. அவரின் இனப் பண்பாட்டு வளர்ச்சிகளுக்கு வழியே இல்லை. (தமிழன் ஓரினத்தவன் என்பதையே இப்பொழுது பலர் ஒப்புக்கொள்வதில்லை! என்னே கொடுமை!) வலிந்து அவரினம் ஆரியமாக்கப்பட்டு வருகிறது. அரசியல் அதிகாரங்களைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. தமிழ் நாட்டு அமைச்சர் மல்லிக்கும் சுக்குக்குமே தில்லிக்கு நூறு முறை அலைய வேண்டியிருக்கிறது. பொருளியல் சுரண்டலைப் பற்றி கூறவே வேண்டியதில்லை. இந்தியாவே வட நாட்டிலுள்ள ஒரு சில முதலாளிகளுக்கே சொந்தம். மற்றும் வைப்பகங்கள், உயிர் முறிக் குழுமங்கள் ஆகிய உருவங்களிலும் வட நாட்டு நிறுவனங்கள் என்னும் பெயர்களிலும் தமிழ் நாட்டுச் செல்வம் நாளும் சுரண்டப்பட்டு வருகின்றது. இன்னும் 'சேட்டுகள்' போன்ற 'அட்டைகள்' எத்தனையோ இங்குண்டு. நம் தேவைக்கு மிகுதியான நூல் இங்கு விளைவிக்கப்படுகிறது, ஆனாலும் பற்றாக்குறை; தேவைக்கு மிகுதியான சருக்கரை விளைகிறது, ஆனாலும் கிடைப்பதில்லை; தேவைக்கெஞ்சிய பைஞ்சுதை (சிமெண்ட்) ஆக்கப்படுகிறது, ஆனாலும் பற்றாக் குறை; ஏன் இந்நிலை? இங்கு விளைகின்றவற்றையெல்லாம் தில்லியின் கையில் கொடுத்து விட்டு, அஃது இடுகின்ற ஐயத்தைப் பெறுகின்ற நிலையில் நாம் இருப்பதால்தாமே! வட நாட்டிற்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்ற தமிழ் நாட்டிலுள்ள பொதுவுடைமைக் கட்சிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? அவை தமிழக விடுதலைக்குக் குரல் கொடுக்கின்றனவா? இல்லையே! அதற்குப்பகரமாக விடுதலை இயக்கத்தையே சாடியல்லவா வருகின்றது! இதன் பொருள் அவை பொதுவுடைமைக் கட்சிகள் அல்ல என்பது தாமே.

இவ்விடத்தில் இயல்பாகவே ஓர் ஐயம் எழலாம். வட நாட்டுச் சுரண்டலை எதிர்ப்பவர் தமிழக முதலாளிகளின் சுரண்டலை ஏற்றுக் கொள்கின்றனரா? என ஒருவர் கேட்கலாம். இப்படிக் கேட்பவர்

ஒன்றைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். தமிழகம் ஓர் அரசியல் அடிமை நாடு. முதலில் இவ்வடிமை நிலையை நீக்கினுல்தான் முதலாளியத்தைத் துடைத்தெறிய முடியும். (இக் கட்டுரை எழுதப் பட்ட தன் முகாமையான நோக்கம் இதனை விளக்குவதே.) இங்குள்ள முதலாளிகள் அடைக்கலம் புகுமிடம் ஆரியத்திலும், தில்லி முதலாளியப் பேயாட்சியாளரின் கூடாரத்திலுமே. ஆரியம் முதலாளியத்திற்கு துணை போவது; முதலாளியத்தைக் கட்டிக் காப்பது. தில்லி ஆட்சி முதலாளியப் பேயரின் வல்லாட்சி. எனவே தமிழகத்தை ஆரியத்திலிருந்தும், தில்லி முற்றுளுமையிலிருந்தும் விடுவிக்காமல் இங்குப் பொதுவுடைமை என்பது வெறும் கற்பனைக் கனவே.

இந்தியா என்பது ஒரு நாடன்று; ஒரு துணைக் கண்டம். இத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு இனங்களை ஆரியமும், தில்லி முற்றுளுமையும் தம் கைகளுக்குள் போட்டு அழுத்தி வைத்துள்ளன. தமிழ் நாடு அனைத்து நிலைகளிலும் ஆரியத்திற்கும், தில்லிக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. தமிழ்நாடு அரசியல் அடிமைக்கு உட்படவில்லை என்று சொல்வது, முதலாளிய ஓர்மையாளர் முதலாளி என்றும், தொழிலாளி என்றும் இரு வகுப்பாரில்லை, வகுப்புப் போராட்டமேயில்லை என்று சொல்லுவதற்கு ஒப்பானதே. எனவே இங்குப் பொதுவுடைமை அரசு அமைய வேண்டுமானுல் முதலில் தமிழகம் விடுதலை பெற்ருக வேண்டும். தமிழக விடுதலை தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியத் துணைக் கண்டத்தில் பிற இடங்களிலும் பொதுவுடைமை அரசு அமைய வழி வகுக்கும்.

எனவே பாட்டாளித் தோழனே! பொதுவுடைமைத் தோழனே!

இங்குப் பொதுவுடைமை அரசை அமைக்கத் தமிழக விடுதலை இயக்கத்தில் இணைந்து செயலாற்றுவோமாக!

தமிழக விடுதலைப்போர் என்பது உலகப் புரட்சி இயக்கங் களுக்கு மேலும் வலுவூட்டுவது; தமிழக விடுதலை உலகப் புரட்சி இயக்கங்களின் ஒரு படி முன்னேற்றத்தையே குறிக்கும்.

விடுதலை பெற்ற தமிழகத்தில் தனிவுடைமை துடைத்தெறியப் படும்; பொதுவுடைமை அரசு, பாட்டாளிகளின் வல்லரசு அங்கு அமையும்.

முதலாளியம், முற்றுளுமை ஆகியவற்றிற்கு எதிரான தமிழக விடுதலைப் போரில் பங்கு பெருத எவனும் பொதுவுடைமைக்காரன் அல்லன். O

(முன்னிதழ்த் தொடர்ச்சி.)

# பாவேந்தர் பாரதிதாசன்.

—பெருஞ்சித்திரன்.

(காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் 9—2—73 இல் நடைபெற்ற முத்தமிழ் விழாப் பாட்டரங்கில் பாடியது.)

*புதிய மனநிலை புகட்டும் பாவலர்*
*முதியோர் காதலை முழக்குதல் கேளீர்!*

"அறம்பெய்த கையும் ஓயும்;
மக்களை அன்பால் தூக்கிப்
புறம்போன காலும் ஓயும்;
செந்தமிழ்ப் புலவர் சொல்லின்
திறங்கேட்ட காதும் ஓயும்!
செயல்கண்ட கண்ணும் ஓயும்!
மறவனைச் சுமக்கும் என்றன்
மனம்மட்டும் ஓய்தல் இல்லை!"

*மறவனைச் சுமக்குமாம் மங்கையின் முதியவுள்ளம்!*
*மனம்மட்டும் ஓயாதாம்; புலவரின் மனவியல்*
*எத்தகு சிறப்பாய் இருந்தது பாருங்கள்!*
*மெத்தவும் சிறப்பாய் மேலும் உரைக்கிறார்!*

"அருகருகிருவர்; மிக்க
அன்புண்டு; செயலே இல்லை!"

*இரண்டே அடிகளில் முதுமையின் இன்பம்*
*திரண்டு வெளிப்படல் புலமையின் திறமே!*
*அடுத்தது பாவலர் மொழித்திறன்; அதனையும்*
*எடுத்துச் சொல்வேன்; இருந்து கேளுங்கள்:*
*புலவர் ஒருவர் புகன்ற சொற்களின்*
*வளத்தை யறிந்தால் மொழித்திறன் உணரலாம்!*
*பாவேந் தர்க்குப் பழந்தமிழ்ப் பயிற்சியின்*
*ஈவாய் அமைந்தது சொல்திறன்! இதோ!ஒன்று*

"நூலைப்படி—சங்கத்தமிழ் நூலைப்படி—முறைப்படி
காலையில்படி! கடும்பகல்படி!
மாலையிரவு பொருள்படும்படி—நூலைப்படி சங்கத்தமிழ்
நூலைப்படி—முறைப்படி

கற்பவை கற்கும்படி-வள்ளுவர் சொன்னபடி-
கற்கத்தான் வேண்டுமப்படி!
கல்லாதவர் வாழ்வதெப்படி-நூலைப்படி-சங்கத்தமிழ்
நூலைப்படி!-முறைப்படி

அறம்படி-பொருளைப்படி-அப்படியே இன்பம்படி-
இறந்ததமிழ் நான்மறை
பிறந்ததென்று சொல்லும்படி-நூலைப்படி-சங்கத்தமிழ்
நூலைப்படி-முறைப்படி

தொடங்கையில் வருந்தும்படி-இருப்பினும் ஊன்றிப்படி!
அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி-நூலைப்படி சங்கத்தமிழ்
நூலைப்படி-முறைப்படி

பொய்யிலே முக்காற்படி-புரட்டிலே காற்படி-
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி? நூலைப்படி-
சங்கத்தமிழ் நூலைப்படி-முறைப்படி

அகப்பொருள்படி அதன்படி புறப்பொருள்படி நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்ப்
புலமைவரும் என்சொற்படி-நூலைப்படி-சங்கத்தமிழ்
நூலைப்படி-முறைப்படி"

எப்படி? படிபடி! எத்தனைப் படிகள்?
செப்படி வேலையா, சொற்படி கட்டுதல்?
எழுதிப் பாருங்கள்; இழுப்புத் தெரியும்!
பாராதி தாசனோர் புலவனு என்பான்!
பாரதிர முழக்குவேன்! பாரதி தாசன்
உன்னை விட,உன் அப்பனை விடவும்
மன்னுதி மன்னன்! பாட்டிலே மன்னன்!
பொழுதிருந் தால், நான் புரட்டிக் காட்டுவேன்!
அழுமூஞ்சி களுக்கே அடிமுடி தெரியுமா?

எதுகைத் தொடையால் எம்பா வேந்தன்
புதுவகைப் பாநடை புனைந்து காட்டினான்!
சத்தி முத்தப் புலவர் மாக்கதை!
பத்தன்று; ஒன்றைப் பகர்வேன் கேளுங்கள் :

அரசி இரவெலாம் அரசனின் வரவை
எதிர்பார்த் திருந்தாள்! இவனோ விடியலில்
பள்ளி எழுச்சி பாடுவான், வந்து!

"இருள் மடிந்தது!
கூவும் சேவல் கழுத்தோ ஒடிந்தது!
கதிரொளி எங்கும் படிந்தது!
துயில் எழுப்புவோரின்
இசைத்தேன் காதில் வடிந்தது!
பெண்ணே விழி, பொழுது விடிந்தது!

கதவைத் திறந்து அரசி சொல்கிருள் :
இரவுநான் தூங்கியபின் வந்தீர்கள் போலும்!
வழிபார்த் திருந்தன இருவிழி வேலும்!
உலாவி அலுத்தன என்இரு காலும்!
துவண்டு போயிற்று என்இடை நூலும்!
ஆறிப் போயிற்றுப் பாலும்!
அழகு குன்றின முப்பழத் தோலும்!
வாடின கட்டிலில் மலர்வகை நாலும்!
கண்விழிக்க எவ்வாறு ஏலும்!
மேலும்!
மேலும்!"

எத்துணை இனிய சொற்கள்?
எத்துணை எளிமை பாட்டில்!
எத்துணை கருத்துத் தேட்டம்!
எத்துணை நயங்கள்! இன்பம்!
எத்துணை யளவு கல்வி
யறிந்தவர் எனினும் பாட்டை
எத்துணை எளிதாய்ப் பாடி
இலக்கிய இன்பம் காண்பார்?

புலமக்கள் கண்ட இன்பம்
பொதுமக்கள் காணு மாறு
சிலபல சொற்க ளாலே
செய்தவர் பாவின் வேந்தர்!
இலைஇலை என்பார்க் கின்னும்
எடுத்தெடுத் திவேன்; ஆனல்
நிலையிலை நேரம்; ஆக
மொழித்திறம் நிறுத்து கின்றேன்.

அடுத்தது புரட்சி யுள்ளம்!
பாவலர்க் கதுதான் நற்பேர்
கொடுத்தது; அவர்க்கும் பீடு
கொடுத்தது! தமிழ்ச்செம் மாப்பால்

*எடுத்தது; நேற்றும் இன்றும்*
*இருக்கின்ற புலவர் யார்க்கும்*
*மடுத்திலாப் பெரிய செல்வம்!*
*மற்றதன் சிறப்பைப் பார்ப்போம்!*

"விடுதலை பெறுவது முதல்வேலை!
அடிமையில் உழல்வது முடியாது!
விழிதுயில் வதுமிகு தவறாகும்-எழுவீரே!"

"செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!"

*என்றே குயிலைக் கூவச் செய்தவர்!*

"சாதி ஒழிந்திடல் ஒன்று-நல்ல
தமிழ் வளர்த்தல்மற் றொன்று!

பாதியை நாடு மறந்தால்-மற்றப்
பாதி துலங்குவ தில்லை!"

*சாதிமேல் அடித்த சம்மட்டி அடியிது!*

"இந்த உலகில் எண்ணிலா மதங்கள்!
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்!
சாதிக்குச் சாவுமணி அடிக்க!"

*சாதிக்கு அடித்த சாவு மணியிது!*

"அடக்குமுறை செய்திடல் முடியும்-கொள்கை
அழிக்குமுறை எவ்வாறு முடியும்?
ஒடுக்குசிறை காட்டுதல் முடியும்!-உணர்
வொடுக்குதல் எவ்வாறு முடியும்!"

*அடக்கு முறைமேல் அடித்த அடியிது!*

"தமிழர்க்குத் தொண்டுசெயும் தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை."

*தமிழ்த்தொண்டு செய்வோர்க்குத் தந்த துணிவிது!*

சிம்புட் பறவையே சிறகை விரி,எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திற!விழி!
இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?
..........................................................

வையம் ஆண்ட வண்டமிழ் மரபே
கையிருப்பைக் காட்ட எழுந்திரு.
குறிக்கும் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு.
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு.
பொன்மொ ழிக்குநீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை!"

தொய்ந்த தமிழனைத் தூக்கி நிறுத்தும்
வெய்யுரை! அழல்சேர் வீர வரிகள்!

'உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்கு
நேர்ந்ததென உரைக்கக் கேட்டால்
நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம்
உணர்வாகி நண்ணி டாரோ?"

"இருக்கும் நிலைமாற்றஒரு புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனும்!"

என்று புரட்சிக் கெழுத்தா ளர்களே
நின்றிங் குதவுதல் வேண்டும் என்பார்!
இவைபோல் பாடல்கள் ஏராளம் உண்டு
அவையெலாம் கூறிட ஆகிடும் ஒருநாள்!

இறுதியாய் அவரின் புரட்சியுள்ளத்தை
உறுதியாய் விளக்கும் ஒரேஒரு பாட்டு!
நகைச்சுவைப் பாடல்! நன்ருய்க் கேளுங்கள்!
ஏசுநாதர் ஏன்வர வில்லை
என்னுந் தலைப்பில் எழுது கின்ருர்

" தலை, காது, மூக்குக், கழுத்துக், கை, மார்பு, விரல்
தாள் என்ற எட்டுறுப்பும்,
தங்கநகை, வெள்ளிநகை, ரத்தினமிழைத்த நகை
தையலர்கள் அணியாமலும்,
விலைகுறையும் ஆடைகள் அணிந்துமே கோயில்வர
வேண்டுமேன்றெ பாதிரி
விடுத்த ஒரு சேதியால் விஷமென்று கோயிலை
வெறுத்தார்கள் பெண்கள், புருஷர்!
நிலைகண்ட பாதிரி, பின் எட்டுறுப் பேயன்றி
நீள்இமைகள் உதடு நாக்கு

நிறையநகை போடலாம், கோயிலில் முகம்பார்க்க
நிலைக்கண்ணா டியும் உண்டென
இலைபோட் டழைத்ததும், நகைபோட்ட பக்தர்கள்
எல்லாரும் வந்து சேர்ந்தார்!
ஏசுநாதர் மட்டும் அங்குவர வில்லையே,
இனிய பாரத தேசமே!"

பக்தர்கள் மண்டையில் படீரென அடிக்கும்
முத்திப் பாடல் இதுவென முழங்கலாம்!
நகைச்சுவை யோடு நயமாய்ச் சொல்லி
வகையாய்ப் புரட்சியை மனத்தினில் விளைத்தார்.
புரட்சிப் பாவலர் பொதுமை உணர்வினை
இறுதியாய்க் கூறுவேன் இருந்து கேட்பீர்!

"புதியதோர் உலகுசெய்வோம்-கெட்ட
போரிடும் உள்ளத்தை வேருடன் சாய்ப்போம்!"
என்று;
பொதுமை உலகம் புனைய விரும்பினார்!

"மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி, மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
உன்வீடு-உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்;
எங்கும் பாரடா இப்புவி மக்களை!
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்துகொள்! உன்னைச் சங்கம மாக்கு!

மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும்! பேத மில்லை!
உலகம உண்ணஉண்; உடுத்த உடுப்பாய்!
புகல்வேன் உடைமை மக்களுக் குப்பொது;
புவியை நடத்து பொதுவில் நடத்து!"

எத்துணை எழுச்சி; எத்துணை உயர்ச்சி!
எத்துணை விரிந்த எண்ணக் குவியல்!
சடசட சடவெனச் சொற்கள் ஆட்சி!
மடமட மடவெனும் கருத்து மாமழை!
உணர்வு மின்னல்; உருட்டும் இடிகள்!
இதைவிடப் பொதுமை என்ன வேண்டும்?
புதுக்கருத் தெவர்தாம் புகன்றிடப் போவார்?
வெறுப்பிலா திருந்து பொதுமையாய் விளக்கினல்
மறுப்பிலா தவரை மாப்புல வோனும்
ஏற்றுக் கொள்ளுவார்; இல்லெனின் தூற்றுவார்!
மாற்றுக் கொள்கையர் மறுத்திட முடியுமா?

"எல்லார்க்கும் தேசம்; எல்லார்க்கும் உடைமையெலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!"
என்றே உரிமைப் பட்டையம் எழுதுவார்!

"இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்
இலேசுவழி ஒன்றுண்டு; பெண்களை ஆடவர்கள்
எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்,
தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்ஒரு நூலா?"

பாவேந்தர் காட்டிய பொதுமை வழியிது!
தீண்டாமை பற்றிப் பாவலர் சாற்றுவார்:

"அற்பத் தீண்டாதார் என்னும் அவரும் பிறரும் ஓர்தாய்
கர்ப்பத்தில் வந்தா ரன்றோ?-சகியே (கர்ப்பத்தில்)
பொற்புடை முல்லைக் கொத்தில் புளியம்பூ
பூத்ததென்றால்
சொற்படி யார் நம்புவார்?-சகியே (சொற்படி)
ஏகபரம் பொருள் என்பதை நோக்க எல்லாரும்
உடன் பிறப்பே-ஒரு
பாகத்தார் தீண்டப் படாதவர் என்பதி லே,
உள்ள தோ சிறப்பே?"

எப்படி அரசியல் இருக்க வேண்டுமாம்,

"ஒப்பிட எவர்க்கும் ஒருவீடு, ஒருநிலம்
ஒருதொழில் ஓர்ஏர் உழவு மாடுகள்"

என்னும் சமநிலை எய்த வேண்டுமாம்
பின்னும் பாவலர் கனல்எழப் பேசுவார்:

"ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப் பதான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்!"

என்று பொதுமைக்கு முத்தாய்ப்பு இடுவார்!
ஒன்று மட்டில் உண்மையென் றறிவீர்!
உலகப் பாவலர்க் குண்டான சிறப்புக்கும்
கழகப் புலவர்பால் காணும் பெருமைக்கும்
மேலாம் இவர்க்கொரு மேன்மை இருந்தது!

தமிழ்உள்ளம் நாட்டுப்பற்று தகுவுயர் சீர்திருத்தம்
இமியுமே குறையாவாறு இருந்தன அவர்பால்!

தமிழ்உள்ளம் அவர்க்கே உள்ள தனியுள்ளம்!
இதற்குமுன் யார்க்கும் இல்லா தது,அது!

"இன்பத் தமிழ்மொழி எமது!-எமக்
கின்பம் தரும்படி வாய்ந்தநல் லமுது!" —என்றதும்,

"கனியிடை ஏறிய சுளையும்-முற்றற்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்-காய்ச்சுப்
பாலிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும்-தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்-தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!" —என்றதும்,

"செந்தா மரைக்காடு பூத்தது போல
செழித்த என் தமிழே ஒளியே வாழி!"

—என்றதும்,

"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தாய் எனில் நைந்து போகும் என் வாழ்வு!
நன்மை உனக்கெனில் எனக்குந் தானே?" —என்றதும்

" எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்! —என்றதும்,

தமிழ்மேல் அவர்க்குள்ள காதலைக் காட்டும்!
தமிழ்க்காக வாழ்ந்தார்; தமிழைப் பாடினார்;
தமிழைத் தொழுதார்; தமிழைப் புதுக்கினார்!

" தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை-என்
தாய்தடுத் தாலும் விடேன்-என்று"

தமிழ்க்காகப் போரிட்டார்;
" இன்பத் தமிழ் குன்றுமேல் தமிழ்
நாடெங்கும் இருளாம்"—என்று

கவன்றார்; அறிவுறுத்தினார்; கண்ணிமையாது காத்தார்!
" தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
தூய்தமிழ் பிதற்றும் என்வாய்"

என்று, தமிழும் தாமுமாய்
ஒன்றிக் கிடந்தார்; உயிரொடு பொருத்தினார்
அந்தத் தமிழே அவரையும் உயர்த்தி
இந்த நாட்டையும் இனிதுயர்த் துவது!

இவர்க்குத் தமிழ்மேல் எத்துணை ஆவலோ
அத்துணை அக்கறை தொழிலா ளர்மேல்!

" குடிக்கவும் நீரற்றிருக்கும்-ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல் கொடுந்தடியர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே-தம்பி
வசங்கெட்டுப் போனது நமதுநன் னாடு!"

என்றவர் கூறுதல் எவ்வகை யில்பிழை?

" சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்-ஆறு
தேக்கிய நல் வாய்க் காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போயெடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?"'

# "அடிமைத்தமிழ் மகனே!"

—இரணியன்.

'மோரிசு' நாட்டினிலும்-பல்வளம்
முற்றிய 'பீசி'யிலும்
சீர்'கயா னா'வினிலும்-பேரெழில்
'தென்னாப்பி ரிக்கா'விலும்,

நீபடு தொல்லையெல்லாம்-தமிழா
நினைந்துயிர் வாடுகின்றேன்!
மாடென வேஉழைக்கும்-உன்துயர்
வாழ்வினைப் பாடுகின்றேன்!

ஊரினுக் குழைத்திடவே-தமிழா
உலகில் பிறந்தனையோ?
பாரகம் வாழ்ந்திடவே-துயர்நீ
பட்டழி கின்றனையோ?

உழைக்கப் பிறந்தஇனம்-தமிழா
உன்இனந் தான்உலகில்!
பிழைக்கும் வகையினையே-அறியாப்
பித்தின மும்உனதே!

வேகின்ற துள்ளமடா!-நித்தலும்
வெந்துவெந் தழிகிறதே!
பாய்கின்ற தீட்டியடா-நிதம்நீ
படுதுயர் எண்ணுகையில்!

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்றஅவர் கேள்வி ஏற்றதோர் கேள்வியே!
தமிழ்க்கவர் தந்த தாழாத உழைப்பும்
தொழிலா ளர்க்கவர் தோள்தந்த மாண்பும்
பாரதி தாசனைப் பாவேந்தர் ஆக்கி
பாரறி யும்படி பண்ணி வைத்தன!

இத்தகு புலவர்போல் எந்தமிழ் மொழியிலோர்
ஒத்த புலவரை உணர்ந்திட வில்லை!
வீரமும் தமிழும் வியத்தகு புலமையும்
ஈரமும் ஏழைமேல் இரக்கமும் சேர்ந்தால்
பாரதி தாசனென் பாவலர் தெரிவார்!
ஊரதி ர,அவர் ஒண்புகழ் வாழ்கவே!

[முற்றும்]

ஆயிரம் கல்தொலேவில்-அடிமை
யாகநாள் போக்கும்உன்பாழ்
தாயகம் விடுதலையை-இன்று
தாங்கியே நின்றிருப்பின்!

உன்நிலை இவ்வணமோ-தமிழா
உலகில் இருக்கும்?ஐயோ!
என்றிது மாறிடுமோ?-உன்றன்
இழிநிலை மாய்ந்திடுமோ?

அயலக மாயினும்நீ-தமிழா
ஆயிரம் ஆண்டுகளாய்
நிலைபெற வாழ்ந்தநிலம்!-இதனை
நீள்வசு லாறறியும்!

உரிமையில் உன்னிலுமே-முதியோர்
உலகினில் இல்லையடா!
அரசினை நீஇழந்தே-தமிழா
அடைதுயர் கோடியடா!

ஆறுகோ டித்தமிழர்-இணைந்தே
ஆர்த்தெழுந் தால்புடவி
நீறுநீ றாய்விடுமே!-தமிழா
நினைந்தநாள் ஒன்றிலேயே!

காற்றின் அசைவினிலே-நீலக்
கடலின் ஒலியினிலே
ஆற்றின் சலசலப்பில்-நின்றன்
அழுவொலி கேட்கிறதே!

உள்ளம் துடிக்குதடா!-உணர்ச்சி
உயிரை அழிக்குதடா!
அல்லும் பகலுமெனை-உன்நினை[வு]
அடித்து நொறுக்குதடா!

---


**தமிழ்ச்சிட்டு, சென்னை-5.**

(தூயதமிழ்ச் சிறுவர் கலையிதழ்.)

| | உள்நாடு | கொழும்பு | பிறவெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 4-00 | 6-00 | 8-00 |
| தனியிதழ் ,, | 0-35 | 0-50 | 0-65 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் எழுதிக் கேட்க!

எங்ஙனம் உருப்படும்? மொழித் தூய்மை கெடக் கற்பித்து, இளஞ் சிறாரையுங் கெடுப்போர் தொடக்கப் பள்ளியாசிரியர்களே. ஐய மின்று; ஆகலின் அவர்கட்கு முதற்கண் அறிவுதெருட்டி, மொழி, இன நல மேம்பாடு விளங்கத் தென்மொழியில் ஒரு கட்டுரை வரைந் துதவுமாறு தமிழ்நல விருப்பால் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

—பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்.

**0 : 405 :** பெருமைமிகு அன்புகெழுமிய ஐயா அவர்கட்கு...... பணிவன்புடன் எழுதும் எங்கள் முதன் மடல். நாங்கள் தனித் தமிழ்க் கொள்கை தளிர்க்கப் பயிலும் இளைஞர்கள். இன்றைய இளைஞர்களைச் சரியான நேர்ப்பாதையில் ஈர்ப்பது தங்கள் கொள்கை ஒன்றுதான்! மற்றவையெல்லாம் மின்னுகின்ற பொய்ம்மை மிகுந்த பொய்யான வாழ்வு! "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்பதற் கிணங்கப் போலியைக் கண்டு ஏமாறாமல் எங்களைத் தமிழனுக-தமிழ்ப் பற்றைக் கொளுத்தி-ஆரியரின் புரட்டை ஒழித்து உண்மைத் தமிழனுக வழிகாட்டியது தங்கள் தென்மொழியும் தமிழ்ச்சிட்டும்-தாம்! இவை காலமெல்லாம் காப்பாற்றி வைக்க வேண்டிய கருவூலம். இதனை மட்டத்தாளில் வெளியிடாமல் தூய வெண்மைத் தாளில் வெளியிடுமாறு மிகவும் அன்புடன் வேண்டுகின்றோம். இவற்றால் விலை ஏறினாலும் நமக்கு அது பெரிதன்று! தங்கள் இதழ்கள் சென்னை யிலிருந்து இனிமேல் புதுப்பொலிவுடன் வெளிவரும் என்பதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி. அன்புடன் எங்கள் நெஞ்சம் கலந்த வாழ்த்து! இதழில் பக்கங் குறைக்காமல் மிகச் சிறப்பாக அழகாகத் தேன்சுவை கலந்த இன்தமிழில் எடுப்பான தோற்றமுடன் விடுதலைப் பாடல் தாங்கி இதே போன்று வெளியிட விழைகின்றோம். விரைவில் கிழமை இதழாகவும் வெளியிட எல்லா வினைகளையும் செய்யும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றோம். அப்போதுதான் நமது கொள்கை யைப் பரப்ப ஏந்தாக அமையும். தொடர்ந்து உங்கள் பணிக்காக-தனித்தமிழ் நாட்டையடைய எங்களுடைய எல்லா உரிமையும் உடைமையும் உண்டு! தங்கள் தொண்டு நனி சிறக்க எங்கள் ஆழ்ந்த அன்பு நெஞ்சங்கள் என்றென்றும் அணியமாய் உண்டு!

—சி. வெற்றிவேந்தன், சி. அறிவுஒளி, மு. கலிதீர்த்தான்.

—கரைமேடு, பாகூர்.

**0 : 406 :** அன்புள்ள ஐயா சால வணக்கம். மிக எளியவர் களாகிய எங்களைத் தங்கள் புதுவை வருகை பெருமைப்படுத்தி விட்டது. தங்களின் அறிவாற்றலை நம் அன்பர்கள் மட்டுமன்றிப் பிறரும் வியக்கின்றார்கள். தங்களின் சொற்பொழிவு நகரில் அடிக்கடி நிகழ்ந்திட வேண்டுமென விழைகின்றனர். எத்தனையோ இலக்கியக் கூட்டங்கள் இங்கே நடந்திருக்கின்றன. ஆனால் குறிப்பிடத் தக்க அளவில் அன்பர் கூட்டமும் குறிப்பிடத்தக்க பெரும்புள்ளிகளும் ஒருங்கே கலந்து கொண்ட மாபெரும் நிகழ்ச்சி நீங்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியேயாகும். எங்களுக்கு நல்ல உரம் கொடுத்து விட்டீர்கள். தமிழ்க்கழகம் அதனால் நல்ல வளர்ச்சியினை நோக்கி நடையிடும் என்று உறுதியாய் நினைக்கின்றேன். வியத்தகு நிகழ்ச்சி மட்டுமல்லாமல் என் நெஞ்சை நெகிழ்த்ததும் நினைவில் ஆழப் பதிந்ததுமாகத் தாங்கள் திரு. தங்கப்பா இல்லத்திற்குச் சென்றதும்

(அடுத்த பக்கம் பார்க்க)

சொந்தத் தங்கை, தங்கையின் குழந்தைகளைப் போலவே திருவாட்டி. தங்கப்பா, அவரின் குழந்தைகளிடம் நடந்து கொண்டதும் ஆகும்.

தாங்கள் இரவுணு அயிலாமல் கண் அயராமல் பேருந்து நிலையத்தில் வண்டியை எதிர்பார்த்து ஏமாறி ஏமாறி எங்களுடன் உரையாடி மகிழ்ந்ததை, மகிழ்ச்சியூட்டியதை, உள்ளக் கிடக்கையினை வெளிப்படுத்தியதை, செயற்பாடுகளைக் கூறியதை, தமிழர் நிலை கண்டு புழுங்கியதை மறக்கவே முடியாது. பேச்சாளர்கள் சிலர் வருவார்கள்; ஒட்டாமல் முடுக்கி விட்ட பொறியினைப்போல முழங்கி விட்டுப் போய் விடுவார்கள் பயன் எவருக்கும் ஏற்படாது. ஆனால் நான் வியக்கின்றேன்; உறுதியாக நம்புகிறேன், தாங்கள் முழுமையாகவே களங்கமில்லாமலேயே கோடிக் கணக்கான மக்களின் நெஞ்சங்களில் நிலைபெறுகின்ற உயரிய தன்மையோடு நாட்டுக்குப் பயன்படுவீர்கள் என்று. ஆம், உண்மை!

—க. தமிழமல்லன், தமிழ்க்கழகம், புதுச்சேரி.

**0: 407:** ஐயா அவர்கட்கு வணக்கம்! யானொரு தனித் தமிழ் பயிலும் தளர்நடைச் சிறுவன். குறிப்பாகத் தங்களது பாத்திறனிலும், செம்மாந்த மொழிவளத்தினும் உள்ளம் பறிகொடுத்தோன். "தென்மொழி" என்னும் செந்தமிழ்த் திங்கள் இதழை நான் பெற்றுப் படிக்க முயலும்போதெல்லாம் "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே! தருநிழலே! நிழல் கனிந்தக் கனியே!" என்னும் வள்ளலாரின் அருந்தமிழ்ப் பாடலே என் நினைவுக்கு வந்து என் உள்ளத்தை மகிழ்விக்கும்! "தென்மொழி" தம் பெயருக்கு ஏற்ப இனிமையான அழகிய செந்தமிழ்ச் சொற்களால் தமிழன் முன்னேற்றக் கருத்துகளையெல்லாம் சிறிதும் தயங்காமல் எடுத்துக் கூறித் தமிழர்களைத் தட்டி எழுப்புகின்றது. தென்மொழியைப் படிப்போரை அஃது உறங்க வைக்கவில்லை; விழிப்புணர்ச்சியைத் தந்து நம் நிலையினை எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறது. தென்மொழிக் கருத்துகளையும், கொள்கைச் சிறப்புகளையும் என் நண்பர் பலரிடமும் கூறி என் தமிழ்க்கடனை இயன்ற அளவில் செய்து வருகிறேன். தங்களின் "விடுதலை வேண்டும்" போன்ற பாடல்களை அடிபிறழாது மனத்தில் இருத்தியுள்ளேன். திருக்கழுக்குன்றம், தேசுமுகிப்பேட்டைத் திருமணத்தின்போது, தங்களை நேரில் கண்டதிலிருந்தும், உரையாடியதிலும் என்னுடைய மொழிப் பற்று, நாட்டுப்பற்று அதிகரித்துள்ளது. தங்கள் பணி தொடர்ந்து நீடிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தங்களின் கொள்கைகளைப் பலரும் அறியும் வண்ணம் சுவர்களிலும், பொது இடங்களிலும் என்னுடைய நண்பர்களுடன் எழுதி வருகிறேன். நாங்கள் எங்கள் ஊரில் உள்ள திரையரங்குகளில் விளம்பரம் செய்ய வேண்டும் என எண்ணியுள்ளோம். ஆகவே அதை எப்படி எழுத வேண்டும் என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

—தேசு. இரா. மணிவண்ணன், தேசுமுகிப்பேட்டை.

(தங்கள் விருப்பப்படி செய்க.—ஆர்.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.